சமூகமே அடிப்படை

கலாநிதி அஹ்மத் அல் - ரைஸூனி

உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி)

தாருல் ஹிக்மா வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S-F-Faizal
shathirila@gmail.com

வெளியீட்டு எண் - 07

சமூகமே அடிப்படை

கலாநிதி அஹ்மத் அல் - ரைஸூனி

உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி)

வெளியீடு
தாருல் ஹிக்மா வெளியீட்டகம்
110, கலாவெவ, விஜிதபுர
0772262640, 0714204216

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : Samoohame Adippadai

Language : Tamil
Author : Usthaz Dr.Ahmedh Al Raisooni
: Usthaz .M.A.M. Mansoor (Naleemi)
1st Edition : March 2015
Published : Darul Hikma Publications
Cover Design : Rashid Nuhuman (OB Creations)
Copies : 1000
Price : Rs. 150/-
ISBN : 978-955-54392-5-1

தலைப்பு : சமூகமே அடிப்படை
ஆசிரியர் : கலாநிதி அஹ்மத் அல் - ரைஸூனி
உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி)
முதல் பதிப்பு: மார்ச் 2015
வெளியீடு : தாருல் ஹிக்மா வெளியீட்டகம்
110, கலாவெவ, விஜிதபுர
0772262640, 0714204216
அட்டைவடிவமைப்பு: றாஷித் நுஃமான் (OB Creations)
பிரதிகள் : 1000
விலை : 150/-
ISBN : 978-955-54392-5-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

அரபு வசந்தமும் அதனைத் தொடர்ந்த நிகழ்வுகளும் இஸ்லாமிய உலகில் ஒரு வித்தியாசமான அலையை ஏற்படுத்தியுள்ளன. ஆயுதப் போராட்ட நிலை அரபு உலகைத் தொடர்ந்து உலுக்கி வருகின்றது. முழு உலகையும் இவ்விரு நிலைகளும் கடுமையாகப் பாதித்துள்ளன. இஸ்லாமிய ஆட்சி பற்றியும், நவீன உலகில் இஸ்லாமிய சமூக வாழ்வு குறித்தும் விரிந்த வாதப்பிரதிவாதங்களும், கருத்துப் பரிமாறல்களும் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பின்னணியில் ஆழ்ந்த சிந்தனை மாற்றங்கள் பல நிகழ்ந்து வருகின்றன. கலாநிதி அஹ்மத் ரைஸூனி, தாரிக் றமழான் போன்ற அறிஞர்கள் பல புதிய சிந்தனைகளை முன்வைத்து வருகிறார்கள். அமெரிக்காவில் இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனமும் பல புதிய ஆய்வுகளை வெளியிட்டு வருகிறது.

சிறுபான்மை சமூகம் இத்தகைய புதிய சிந்தனைகளை அறிமுகப்படுத்திக் கொள்வதும், புரிந்துகொள்வதும் அவசியமானதும் பயன்மிக்கதுமாகும்.

நவீன வாழ்க்கைச் சூழல் மிகவும் வித்தியாசமானது. ஊடகத்துறையும், போக்குவரத்து சாதனங்களின் வளர்ச்சியும் மனித வாழ்வை மிகப்பாரியளவு மாற்றி விட்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளன. சிந்தனைக் கலாச்சாரப் பரிமாற்றங்கள் நவீன உலகில் மிக வேகமானது. மனிதன் அல்லது ஒரு சமூகம் தனிமைப் பட்டு, மூடுண்டு வாழ்வதென்பது தற்போதைய உலகில் சாத்தியமற்றது.

இது அரசர்களது யுகமல்ல. பொதுமக்களது யுகம். இது விரிந்த சுதந்திரத்தின் யுகம். கொள்கை, எழுத்து, பேச்சுச் சுதந்திரம் மிகைத்துவிட்ட காலமிது. மனித அறிவு மிகப்பாரியளவு வளர்ச்சியடைந்து விட்ட காலக் கட்டமிது. அனைத்தையும் பகுத்தறிவு ரீதியாகவும், விஞ்ஞானபூர் வமாகவும் பார்க்கவும், ஆராயவும் இப்போது மனிதன் பழகியுள்ளான்.

இது மிகப் பாரிய பொருளாதார உலகம். மிக விரிந்துவிட்ட உற்பத்திப் பெருக்கம், கண்டங்கள் தழுவிய கம்பெனிகள் பல்வேறு வகைப்பட்ட பொருளாதாரப் பரிமாற்ற ஒழுங்கு கள் நிறைந்த உலகில் நாம் வாழ்கிறோம். இவ்வணைத்து மாற்றங்களோடும் ஒத்துச் செல்கின்ற கொள்கை, கோட் பாட்டொழுங்கும், நிர்வாகக் கட்டமைப்பொழுங்கும் எமக்கு அவசியம்.

இந்நிலையிலேயே 20ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிகளில் செல்வாக்கு செலுத்திய சிந்தனைகளையும், கோட்பாடு களையும் கூட மீள்பரிசீலனை செய்யக் கூடிய கட்டத்தில் நாமுள்ளோம். எனவே அது 2, 3, 4 நூற்றாண்டுகளில் வாழ்ந்த எமது இமாம்களது சிந்தனைகள் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்பது பற்றி விளக்கத் தேவை யில்லை.

இந்தக் கருத்துப் பின்னணியில் இன்றைய உலகின் சிந்தனையாளர்களைப் படிக்கவும், ஆராயவும் முயல்கி றோம். அவற்றிலிருந்து எமது நாட்டுக்கான சிந்தனை ஒழுங்கொன்றை கட்டியெழுப்ப முற்படுகிறோம். அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையான ஒரு சிறிய முயற்சியாகவே இது அமைகிறது. இத்தோடு நின்றுவிடாது தொடரான சில நூல்களை வெளியிட இன்ஷா அல்லாஹ் முயல்வோம். அல்லாஹ் அருளும், உதவியும் புரிவானாக.

இந்த நூலை வெளியிடு வதில் தாருல் ஹிக்மா வெளியீட்டகத்தின் சகோதரர்களான சட்டத்தரணி என். ஸவாஹிர் மற்றும் எம்.ஏ. இஸ்ஸதீன் ஆகியோர் எல்லாப் பொறுப்புக்களையும் சுமந்துகொண் டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு அதற்கான நற்கூலியை வழங்குவானாக எனப் பிரார்த்திக்கின்றேன்.

இஸ்லாமிய ஊழியன்
எம்.ஏ.எம். மன்ஸூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டுரை

அகிலத்தாரின் இறைவன் அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். அல்ஹம்துலில்லாஹ். மனித சமூகத்தை வழிகேட்டி லிருந்து நேர்வழியின் பால் செலுத்த இந்த உலகத்திற்கு அருட்கொடையாக வந்த எம் பெருமானார்; நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் தோழர்கள், குடும்பத்தினர் மற்றும் மறுமை வரை அவரைப் பின் தொடர்ந்து வரும் அனைவர் மீதும் அல்லாஹ்வின் அருளும் ஈடேற்றமும் உண்டாவதாக!

தாருல் ஹிக்மா பதிப்பகத்தின் ஏழாவது நூலாக வெளி வரும் இந்நூல் வித்தியாசமான கருத்தாடலை இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு முன்வைக்கின்றது. ''சமூகமே அடிப்படை'' எனும் இந்நூல் இரண்டு அலகுகளைக் கொண்டது.

முதலாவது அலகு கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி அவர் களால் எழுதப்பட்டது. கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி அவர்கள் மொறோக்காவைச் சேர்ந்த பிரபலமான மார்க்க அறிஞராவார். இவர் முஸ்லிம் சமூகத்தின் பெரும் பகுதி யின் குறிப்பாக பல இஸ்லாமிய இயக்கங்களின் செயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளுக்கு வித்தியாசமான கருத்தாடலை முன்வைக் கின்றார். அதாவது இஸ்லாமிய இயக்கங்கள் இஸ்லாமிய கிலாபத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுவ தாகவும் முஸ்லிம் உம்மாவிற்கு அவ்வாறானதொரு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை அல்லது கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் குறைவானது என்ற கருத்தை முன்வைக்கின்றார். இது தமிழ் இஸ்லாமிய வாசகர்களுக்கு புதியதொரு விடயமாகும். இதனை உதாரணங்களோடு தொடர்புபடுத்தியுள்ளார் கலாநிதி அஹ்மத அர்ரைஸூனி அவர்கள். இதனை உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி) அவர்கள் மொழி பெயர்த் துள்ளார்.

இதன் இரண்டாவது அலகான ''நவீன இஸ்லாமிய சிந்தனையினுள்ளே எனது பயணம்'' எனும் அலகு உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி) அவர்களால் எழுதப்பட்டதாகும். இலங்கையின் தஃவா களத்தில் தனது அனுபவங்களைப் பகிர்வதன் மூலம் தஃவா களத்திலுள்ள வர்கள் படித்துக் கொள்ளவேண்டிய பல பாடங்கள் இருப் பதாக நாங்கள் உணர்கின்றோம். அல்லாஹ் எல்லாவற்றை யும் நன்கறிந்தவனாக இருக்கின்றான்.

இந்த நூலை மொழிபெயர்த்து தனது அனுபவ ஆக்கத் தையும் எழுதித் தந்துதவிய உஸ்தாத் எம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி) அவர்களுக்கும் இதன் தளக்கோளம் அட்டை வடிவங்களைச் செய்து தந்த அஷ்ஷெய்க். றாஷித் நுஃமான் அவர்களுக்கும் இந்நூலை வாங்கிப் பிரயோசனமாக ஆக்கிக் கொள்ளும் வாசகர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

எமது ஏனைய நூல்களுக்கு வாசகர்கள் ஆதரவு வழங்கியது போல் இந்நூலுக்கும் வழங்குவீர்கள் என பெரிதும் எதிர் பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் பற்றிய கருத்துக்கள், விமர்சனங்கள் இருப்பின் அவற்றை உரிய முறையில் தெரியப்படுத்துமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இது எங்களது பணிகளைச் சிறப்பாகச்செய்வதற்கான ஆலோசனைகளாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

எம்.ஏ. இஸ்ஸதீன்
தாருல் ஹிக்மா பதிப்பகம்
20 மார்ச் 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 சமூகமே அடிப்படை

சமூகம் என்பதால் நான் கருதுவது இஸ்லாமிய சமூகத்தையாகும். அது முஸ்லிம்களின் கூட்டமைப்பு ஜமாஅத். எந்த இணைவைத்தலுமின்றி இரட்சகனாக அல்லாஹ்வையும், முஹம்மத் (ஸல்) அவர்களை அவர் களுக்குப்பின் நபி கிடையாது என்ற கருத்து அடிப்படை யில் நபியாகவும், இஸ்லாத்தை அது தவிர வேறு மார்க்கம் கிடையாது என்ற வகையில் பூரணத்துவ மார்க்கமாகவும் நம்பிக்கை கொண்ட அந்த நம்பிக்கையாளர்களையே அந்த சமூகம் என்கிறோம். எனவே 'உம்மாஹ்' என்பதன் கருத்து பொதுவாக அனைத்து முஸ்லிம்களையும் அடக்குகிறது. 'அவ்வாறுதான் உங்களை நாம் மக்களுக்கு சான்றுபகரும் நடுநிலை சமூகமாக ஆக்கினோம், தூதர் உங்களுக்கு சான்று பகர்பவராக இருப்பார் (ஸுரா பகரா-143), 'நீங்கள் மனிதர்களுக்காக உருவாக்கப்பட்ட மிகச் சிறந்த சமூகத்தினர் (ஸுரா ஆலஇம்ரான்-110)' என்ற இந்த வசனங்களால் விளித்துப் பேசப்பட்ட சமூகமே அது வாகும்.

இந்த சமூகத்தின் உள்ளே, அதன் அகத்தில் பல நிறுவனங்களும், கட்டமைப்புகளும் உருப்பெற முடியும். அவை வழிநடாத்துபவையாக ஆள்பவையாக இருக்க முடியும் அல்லது ஆதிக்கம் செலுத்துபவையாக அமைய முடியும். ஆட்சித் தலைமை அல்லது தலைவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரிகள், கவர்னர்கள், நீதிபதிகள், இராணுவத் தளபதிகள், இராணுவம், பொலிஸ் போன்ற பல பிரிவினரும் அவற்றையொத்த பல நிறுவனங்களும் இதற்கு உதாரணங்களாகும். அரசு என்பது இத்தகையவர்களால் ஆனதுதான். இவர்கள் மீதுதான் அரசு எழுகிறது; நிலைபெறுகிறது; தொடர்ந்தியங்குகிறது.

இந்த நூல் சமூகத்திற்கு அரசோடுள்ள தொடர்பு பற்றி ஆய்கிறது. இந்த வகையில் அரசு, சமூகம் இரண்டினதும் ஸ்தானம் என்ன? ஒன்றை அடுத்ததோடு ஒப்பிட்டு நோக்கும் போது ஒவ்வொன்றுக்குமான அந்தஸ்த்தென்ன? இஸ்லாமிய கொள்கையில், ஷரீஅத்தின் கட்டளைகளைப் பொறுத்தவரையில் இவை ஒவ்வொன்றினதும் நிலைப்பாடும், தராதரமும் என்ன? போன்ற இந்த விடயங்களை இந்த நூல் விளக்குகிறது. இப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் கோட்பாட்டு ரீதியாக அதனை எந்தக்கருத்தின் அடிப்படையில் ஆக்கியபோதும், அவ்வாறே எக்கருத்தின் அடிப்படையில் அதனை நிலைநாட்டியபோதும் விளைவு பாரதூரமாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை. விளைவுகள் ஏதோ ஒரு போக்கில் பாரதூரமானதாகவே அமையும்.

ஷரீஅத் அரச நிர்வாகம் குறித்த பழைய, புதிய எழுத்துக்களும், அரச நிர்வாகம், யாப்பு பற்றிய இன்றைய ஆய்வுகளும், அரசு, அதன் நிறுவனங்கள், அதன் பணிகள், அதிகாரங்கள் பற்றியே கவனத்தைக் குவித்துள்ளன. இந்த வகையில் போதுமானளவுக்கும் மேலாக அரசின் முக்கியத்துவம், அதன் தவிர்க்க முடியா அத்தியவசியம் என்பன குறித்து அவை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன. இந்நிலையில் பெரும்பாலும் அவை வாழ்வு யதார்த்தத்தை பிரதிபலித்தன என்பது உண்மை. ஆனால் இந்நிலையின் விளைவாக அவை சமூகத்தின் வகிபாகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அந்தஸ்த்து, அதன் பணிகள், அதிகாரங்கள் என்பவற்றைப் புறக்கணித்தன; மேலும், மேலும் வாழ்வு யதார்த்தத்தைப் பலப்படுத்தின என்றே கூறவேண்டும்.

''சமூகமே அடிப்படை'' என்பதுவே நூல் முன்வைக்கும் கருத்தியலாகும். ஷரீஆவின் கட்டளைகள் யாரை முன்னிறுத்தி விளிக்கின்றன என்று நோக்கினாலும், அதிகாரங்கள், பொறுப்புக்கள் என்ற கோணத்திலிருந்து பார்த்தாலும், முதன்மைப்படுத்துதல் என்ற வகையில் நோக்கினாலும் சமூகமே அடிப்படை என்பதுவே உண்மை யாகும். அரசு, ஆட்சியாளர்கள், விஷேட பிரிவினர்கள், தனிநபர்கள் என்போர்; சமூகத்தின் பின்னால் வருவோரே அந்தக் கருத்தியலினிடையே வருவர்.

இந்த சிந்தனையை விவரித்து, உதாரணங்களும், ஆதாரங் களும் தர முன்னால் இங்கு ஒரு கருத்தைத் தர விரும்புகிறேன். சமூகம், அரசு என்பவற்றின் அந்தஸ்த்து பற்றிய இக்கருத்துக்கள் சமூகத்தின் முதன்மைத்தன்மை, அரசு அதன் கிளையாகவும், அதனைப் பின்பற்றியும் நிற்கின்றமை, அல் குர்ஆன் சமூகத்தை விளித்துப் பேசுகின்றமை, தனிமனிதனை விளித்துப்பேசுதல் அதனையொட்டி அமைந்திருக்கின்றமை - இவை இஸ்லாமிய சமூகக்கட்டுமானத்தினதும், இஸ்லாமியக் கோட்பாட்டினதும் அடிப்படையான பெரும் கருத்துக்கள். ஆனால் அவை சிதைவுற்று, தேய்ந்துபோயுள்ளன. சரியாகச் சொன்னால் அவை தலைகீழ் வடிவெடுத்துள்ளன எனலாம். இதுவே சமூகம் தனது அந்தஸ்தை இழக்கக் காரணமாகியது. அதனால் தனது வழிநடாத்தல் பண்பை யும் அது இழந்தது. ஆக்க சக்தியையும், புத்தாக்க ஆற்றலை யும் இழந்தது.

சமூகம் வெறும்பார்வையாளர்களாக அமையவும், நுகர் வோர், நுகரப்படுபவர்கள் என்பவர்களைக்கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதறிய பெரும் கும்பல்களை மட்டும் கொண்டமையவும் இது காரணமாகியது. இதேவேளை அரசு பருத்துப் பெரிதாகி, வீங்கி, அதுவே அடிப்படையாகியது. அதுவே எல்லாமாகியது. இந்தத் தலைகீழ் நிலைமையால் தனிநபர் உணர்வுகளும், கவலைகளும் வளர்ந்தன. தனிநபர் சுயநல நடத்தையும் வளர்ந்து வேரூன்றிப் போனது.

சமூகம், அரசு இரண்டினதும் அந்தஸ்த்திற்கான ஒழுங்கை ஒரு பிரமிட்டுக்கு ஒப்பிடலாம். அதன் அடித்தளமும், அதன் உடலின் பெரும் பகுதியும் சமூகமாக இருக்கும். பிரமிட்டின் தலையாக இருக்கும், உயர் பகுதி சிறு முக்கோண வடிவம் அரசாக அமையும்.

குறிப்பிட்ட சில காலமாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் தலைகீழ் நிலையே தலைகீழ் கூம்பு வடிவாகும். அந்நிலையில் அடிப்பகுதியில் உள்ள முக்கோனமே சமூகமாகும். நீண்டு பருத்துள்ள மேற்பகுதி அரசாகும்.



படம்-1



படம்-2

முதலாவது நிலையில் சமூகமே அடித்தளம்; அதுவே நிறைந்த உடம்பு, நீளப் பக்கமாகவும், அகல, ஆழப் பக்கமாகவும் விரிந்த இடத்தைப் பிடித்திருப்பதுவும் அதுவே. அரசு கண்காணிக்கவும், அவதானிக்கவும், நெறிப்படுத்தவும், இணைப்பேற்படுத்துவதற்குமான சிறியதொரு கோபுரம் போன்றமைந்துள்ளது. அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் அது சிறியதொரு இடத்தையே பிடித்துள்ளது. எனினும் அது உயர்ந்த, உச்சி இடத்தில் அமைந்துள்ளது. **(வரைபடம் 1 ஐப் பார்க்க.)**

தலைகீழ் நிலையில் சமூகத்திற்கு பிரமிட்டின் அடிப்பகுதியில் குறுகிய, கூரியதொரு கோணப் பகுதியையே காண்கிறோம். அரசோ அந்தக் குறுகிய இடத்தின் மேலால் உட்கார்ந்து பருத்துப் பாரமாகி அழுத்திக் கொண்டு நிற்கிறது.
(வரைபடம் 2 ஐப் பார்க்க.)

சமூகத்திற்கும், தலைமைகளுக்கும் மத்தியில் ஷரீஆவின் கட்டளைகள் முன்வைக்கப்படல்:

ஷரீஆவின் பல சட்டவசனங்கள் உள்ளன. அவை வழமையாக நிறைவேற்று அதிகாரம், நீதி நிர்வாக அதிகாரம், சட்டமியற்றல் அதிகாரம் கொண்ட பிரிவினரைக் குறிப்பாக விளித்துப் பேசப்படுவதாக விளங்கப் படுவதுண்டு. அதாவது அந்த அல்குர்ஆன், சுன்னாவின் சட்டவசனங்கள், அரசாங்க விடயங்கள், அதன் அதிகாரத்திற்குட்பட்ட விவகாரங்கள் எனக் கருதப்படுகின்றன. நீதியை நிலைநாட்டுமாறு கேட்கும் சட்டவசனங்கள், ஜிஹாத், யுத்தம் சம்பந்தமான வசனங்கள், தண்டனைகள் நிறைவேற்றப்படல் சம்பந்தமான வசனங்கள், அல்லாஹ் இறக்கியவற்றைக் கொண்டு தீர்ப்பு வழங்குங்கள் என்று வரும் வசனங்கள், ஸகாத், குடும்பம், சமூகம் என்பவற்றை ஒழுங்குபடுத்தல், கட்டமைத்தல் சம்பந்தமாக வரும் வசனங்கள் என்பவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

ஆனால் இந்த விவகாரங்களிலும், இதையொத்த ஏனைய விவகாரங்களிலும் அரசுக்குக் குறிப்பான , விஷேடமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரிடம் கொடுக்கப்படுவதாகவோ, மேலதிகப் பொறுப்பு இருப்பதாகவோ நான் கருதவில்லை. இங்கு அல் குர்ஆனின் சட்ட வசனங்கள் விளித்துப் பேசுவது அடிப்படையில் 'உம்மாஹ்வை' நோக்கியதாக, முஸ்லிம் சமூகத்தை நோக்கியதாகவே உள்ளது என்றே நான் கூறுவேன். இந்த அடிப்படையிலிருந்தே அல்லது இந்த அசல் பண்பிலிருந்தே நலன்களின் அடிப்படையிலும், அத்தியாவசிய நிலை வேண்டுவதற்கேற்பவும், ஒழுங்கு படுத்தல், கட்டமைத்தல் என்பவை பற்றிய சமூகத்தின் பார்வைக்கேற்பவும் பொறுப்புக்கள் பகிரப்பட்டு, பிரிந்து செல்லும். ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது வழக்காக உள்ள அமைப்புக்கேற்ப இவை விரிந்த ஒழுங்குகளைப் பெறும்.

இப்பொது விவகாரங்களிலும், ஏனைய பெரும்பாலான கடமைகள், பொறுப்புக்களின் போதும் ஷூரா விளித்துப் பேசல் முஸ்லிம் சமூகத்தை நோக்கியதாக உள்ளது. முஸ்லிம் சமூகத்திற்கான அழைப்பாகவே அப்போ தெல்லாம் அது அமைந்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அல்குர்ஆனின் இப்போக்கே நாம் விளக்கும் இக்கருத்திற்கு ஆதாரமாகும். ஷூரா சமூகத்துடனேயே உறவாடுகிறது. தலைவர்களுடனல்ல. சமூகத்துடனேயே அது பேசுகிறது. அரசுடனல்ல. தலை வர்களும் அவர்களைச் சார்ந்தோரும் சமூக விவகாரங் களோடு சம்பந்தப்படும் ஒரு பகுதி. எனவே அந்த சமூகத்துடாகவே அவர்கள் விளிக்கப்படுகிறார்கள். அதன் மூலமே பொறுப்புக்களைப் பெறுகிறார்கள்.

கீழ்வரும் சில உதாரணங்களை ஆழ்ந்து அவதானிப்போம். இந்த வசனங்கள் யாரை விளித்துப் பேசுகின்றன? யாரைக் கவனத்திற் கொள்கின்றன எனப் புரிவோம்.

'நூஹுவுக்கு உபதேசித்தவற்றை உங்களுக்கு மார்க்க வழிமுறையாக ஆக்கினோம். உமக்கு நாம் அறிவித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையும், இப்றாஹீம், மூஸா, ஈஸா என்போருக்கு அறிவித்தவையும் மார்க்கத்தை நிலைநாட்டுங்கள். அதில் (மார்க்கத்தில்) பிளவு படாதீர்கள் என்பதாகும். (ஸுரா-ஷுரா-13)

அனைவரும் ஒன்றாக அல்லாஹ்வின் கயிற்றை (அல்குர்ஆனை)ப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். பிளவுபட்டுப் போய்விடாதீர்கள். (ஸுரா ஆல இம்ரான் -105)

இறைநம்பிக்கையாளர்களான ஆண்களும், பெண்களும் ஒருவருக்கொருவர் பொறுப்புதாரர்கள். அவர்கள் நன்மையை ஏவுவார்கள், தீமையைத் தடுப்பார்கள். தொழுகையை மிகச் சீரிய முறையில் நிறைவேற்றுவார்கள். ஸக்காத்தைக் கொடுப்பார்கள். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பார்கள். (ஸுரா தவ்பா - 75)

உங்களில் திருமண முடிக்காதோருக்கும் உங்களது அடிமைகளான ஆண்கள், பெண்களில் நன்நடத்தை கொண்டோருக்கும் திருமணம் முடித்து வையுங்கள். (ஸுரா - நூர்-32)

இறைநம்பிக்கையாளர்களே இறைநம்பிக்கையாளர்களான பெண்கள் உங்களிடம் நாடு துறந்து (ஹிஜ்ரத்) வந்தால் அவர்களைப் பரீட்சியுங்கள். (ஸுரா மும்தஹினா-50)

அவர்கள் இருவரிடையே பிளவு ஏற்படுமென்று நீங்கள் பயந்தால் அவனது (கணவன்) குடும்பத்திலிருந்து ஒருவரையும் அவளது (மனைவி) குடும்பத்திலிருந்து ஒருவரையும் நடுவர்களாக அனுப்பி வையுங்கள். (ஸுரா: நிஸா-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களவெடுத்த ஆண், பெண் இருவரதும் கைகளை வெட்டி விடுங்கள். (ஸுரா: அல்-மாயிதா - 38)

விபச்சாரம் செய்த பெண், ஆண் ஒவ்வொருவருக்கும் நூறு அடிகள் கொடுங்கள். (ஸுரா நூர்-2)

கற்புநெறியுள்ள பெண்கள் மீது அவதூறு கூறி பின்னர் நான்கு சாட்சிகள் கொண்டுவராவிட்டால் எண்பது கசை அடிகள் அடியுங்கள். (ஸுரா நூர் - 04)

உங்களது பெண்களில் எவரேனும் மானக்கேடான பாவத்தைப் புரிந்தால் அவர்களது குற்றத்தை நிறுவ நான்கு சாட்சிகளைக் கொண்டு வாருங்கள். அவ்வாறு சாட்சிகள் மூலம் குற்றங்கள் நிறுவப்பட்டால் மரணிக்கும் வரையில் அல்லது அல்லாஹ் ஏதாவதொரு வழியை ஆக்கும் வரையில் வீடுகளில் அவர்களைத் தடுத்து வையுங்கள். உங்களில் இரு ஆண்கள் அப்பாவத்தைச் செய்தால் அவர்களுக்குத் தண்டனை அளியுங்கள். (ஸுரா நிஸா-16)

இறைநம்பிக்கையாளர்களில் இரு பிரிவினர் போராடிக் கொண்டால் அவர்களிடையே சமாதானம் செய்யுங்கள். அவ்வாறிருந்தும் ஒரு பிரிவினர் அடுத்த பிரிவினர் மீது அத்துமீறினால் அத்தகைய அத்துமீறியவர்களோடு அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் திரும்பும்வரை போராடுங்கள். அப்பிரிவினர் மீண்டு வந்து விட்டால் அவர்கள் இரு சாராரிடையேயும் நீதியான முறையில் சமாதானம் செய்துவையுங்கள். நீதி செலுத்துங்கள். அல்லாஹ் நீதியுடன் நடப்போரை நேசிக்கிறான். (ஸுரா - ஹுஜுராத் - 09)

அல்லாஹ் உங்களுக்கு வாழ்வின் ஆதாரமாக ஆக்கி வைத்துள்ள உங்களது செல்வங்களை அறிவுப் பலமற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களிடம் கொடுக்காதீர்கள். அதிலிருந்து அவர்களுக்கு உணவளியுங்கள், உடையளியுங்கள். அவர்களோடு சிறந்த முறையில் பேசுங்கள். (ஸுரா நிஸா - 04)

இந்த அனைத்து வசனங்களிலும் இதனையொத்த இன்னும் நிறைய வசனங்களிலும் விளித்துப் பேசப்படுபவர் அரசு, கலீபா, கவர்னர், குறிப்பிட்டதொரு மன்றம், சபை என்ற மையவில்லை என்பது மிகத்தெளிவு. இங்கு விளிக்கப் படுபவர் சமூகம் அல்லது பொதுவாக மக்கள்.

'இறை நம்பிக்கையாளர்களே' என்ற வடிவில் வரும் அனைத்து விளிப்புகளும் இதே பொருளைக் கொடுக் கின்றன என்பது தெளிவானதொரு விடயம்.

அடிப்படையில் பக்தி உணர்வையும், முற்றிலும் கட்டுப் பட்ட தன்மையும் காட்டும் மிகப் பிரதான வணக்க வழிபாடுகளை நோக்கினாலும் இந்த உண்மையை அவதானிக்க முடியும். உண்மையில் வணக்க வழிபாடுகள் என்பவை தனிநபர் சார் அக எண்ணம், உணர்வு சார்ந்த தாகும். தனிமனிதனின் ஆன்மாவிலிருந்து அவை வெளிப்பட்டு அவனைப் போய்ச் சேர்வதாகும். இந்த வணக்க வழிபாடுகளில் கூட பல்வகையான சமூகப் பரிமாணங்களை அவதானிக்க முடியும். அதற்கான கட்டளை கூட்டாக, சமூக ரீதியாக வருகிறது. தனிநபர் அடிப்படையிலும் சிலவேளை அது வருவதுண்டு. ஆனால் அதனை நிறைவேற்றல் அடிப்படையில் கூட்டமைப் பையே கொண்டுள்ளது. தயார்படுத்தல், ஷரத்துகள், சாதன வசதிகள், பரஸ்பர உதவி, ஒருவருக்கொருவர் உபதேசித் துக் கொள்ளல் என்ற அர்த்தத்தில் அது சமூகத்தின் மீதும், கூட்டுச் செயற்பாட்டின் மீதும் தங்கியுள்ளது..

உதாரணமாக தொழுகைக்கும், ஸக்காத்திற்க்குமான கட்டளை முஸ்லிம் சமூகத்தை விளித்தே விடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தொழுகையை நிலை நாட்டுங்கள், ஸக்காத்தைக் கொடுங்கள்.'' (ஸுரா பகரா - 43)

தொழுகையை நிறைவேற்றல் முடியுமானளவு பெருந் தொகை ஆண்களும், பெண்களும் கலந்து கொள்ளும் கூட்டுச் செயற்பாடாகும். முஸ்லிம் தனது வாழ்வில் மிக அதிகமாகக் கலந்து கொள்ளும் கூட்டுச் செயற்பாடு அதுவாகும். ஒவ்வொரு தொழுகையின் போதும் தொழுபவர், ''எம்மீதும் நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாவதாக எனக் கூறுகிறார்.

ஸகாத் செல்வவளம் கொண்டவர்களுக்கும், தேவை உடையோர்களுக்குமான உதவியையும், ஒத்தாசையையும் அடிப்படையாகக் கொண்ட சகோதரத்துவ தொடர்பாகும். எனவேதான் ''அவர்களின் செல்வந்தர்களிடமிருந்து பெற்று ஏழைகளுக்கு திருப்பிக் கொடுக்கப்படுகிறது.'' என இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள். *(ஸஹீஹ் புஹாரி - அத்தியாயம்: ஸகாத், ஸஹீஹ் முஸ்லிம் - அத்தியாயம்: ஈமான்)*

நோன்பு மிகவும் மறைவானது. அக வாழ்க்கையுடன் தொடர்புபட்டது. அது ஒரு தனிப்பட்ட வணக்கம். அவ்வாறிருந்தும் அல்லாஹ் அதனைக் குறிப்பிட்ட தொரு மாதம், ஆரம்பம், முடிவு என ஆக்கியுள்ளான். அதன் விளைவாக வரும் சமூகப் பரிமாணங்கள் நாம் அனைத்து முஸ்லிம் சமூகங்களிலும், முஸ்லிம் கூட்டமைப்புகளிலும் அவதானிக்கக்கூடிய வகையில் மிகத் தெளிவாக உள்ளன. தனிநபர் நோன்பு மட்டுமே நோக்கமாக இருந்திருந்தால் ஒவ்வொருவரும் தனக்கு உரிய மாதத்தையும், நேரத்தையும் தெரிவுசெய்து கொள்ளட்டும் என விடப்பட்டிருக்கும்.

ஹஜ்ஜைப் பொருத்தவரையிலும் இவ்விடயம் மிகத் தெளிவு. ஹஜ் பற்றிய அழைப்பிலும் அதனைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவாக அவதானிக்க முடியும். ஹஜ்ஜுக்காக மக்களிடையே அழைப்பு விடுப்பீராக. (ஸுரா ஹஜ் - 27)

''அல்லாஹ்வுக்காக இறையில்லத்தை நாடிப் போய் ஹஜ் செய்வது மக்கள் மீது கடமையாகும்.''(ஸுரா ஆலஇம்ரான் - 97),
ஹஜ் நிறைவேற்றப்படும் அமைப்பிலும் இதனைத் தெளிவாக அவதானிக்க முடியும்.

இந்த அனைத்து அடிப்படை வணக்க வழிபாடுகளிலும் உதவுதல், தூண்டுதல், என்ற வகையிலும் நெறிப்படுத்தல் மேலதிகப் பணிகள் என்ற வகையிலும் அரசுக்கு சில பங்களிப்புகள் இருக்க முடியும். ஆனால் இக்கடமை களைப் பொறுத்தவரையில் அரசைக் குறிப்பாக விளித்துப் பேசுதல் என்பது கிடையாது. அவ்வாறே அரசின் நிர்வாக ரீதியான ஒழுங்குபடுத்தல்கள், அதன் தூண்டுதல்கள், உதவி கள் என்பவற்றில் அது தங்கியிருப்பதுவும் கிடையாது.

சில அரசுகள் இந்த வணக்க வழிபாடுகள் சிலவற்றைத் தடைசெய்தன. அப்போது முஸ்லிம் சமூகங்கள் சொந்தக் கஷ்டங்களை நீக்க எவ்வாறு போராடுமோ அவ்வாறு போராடின. அத்தடைகளை நீக்கின. அவற்றைத் தாண்டும் சக்தியும் பெற்றன. 'உம்மாஹ்' அல்லது முஸ்லிம் சமூகம் தனது பொறுப்புக்களை விளங்கிச் செயற்படும் தரத்தில் இருக்க முடியும். அல்லது அப்பகுதியில் குறைபாடுகள் கொண்டதாக இருக்க முடியும். முஸ்லிம் சமூகங்களுக்கு அரசு இருக்க முடியும், இல்லாதிருக்கவும் முடியும். இருக்கும் அரசு உதவ முடியும், உதவாதிருக்கவும் முடியும் ஆனால் வணக்க வழிபாடுகளைப் பெருமைப்படுத்து வதிலும், அவற்றைப் பேணிப் பாதுகாப்பதிலும், அவற்றை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு வசதிகளை உருவாக்கிக் கொடுப்பதிலும், அவற்றின் முன்னே இடப்படும் தடை களை அகற்றுவதிலும் 'உம்மாஹ்' அல்லது சமூகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குள்ள கடமையை ஒருபோதும் மறக்க முடியாது. அவை தமது பணி என்பதையும் அவை ஒரு போதும் புறக்கணிக்க முடியாது.

மார்க்கத்திற்கு உதவுதலும், அதன் தூதை சுமத்தலும்:-

மார்க்கத்தைப் பாதுகாத்தல், அதற்கு உதவல், அதனை உலகத்தாரிடம் கொண்டு செல்லல் என்ற பணிகள் நாம் ஏற்கனவே விளக்கிய தலைகீழ் சூழ்நிலையில் அரசு-அறிஞர்கள் என்ற வட்டத்தின் உள்ளேயே சுற்றுகின்றன. அது அவர்களின் கடமை, தொழில், பொறுப்பு என்ற அபிப்பிராயம் அறிவிலும், உள்ளங்களிலும் ஆழ்ந்து நிலை பெற்ற கருத்தாகிப் போய்விட்டது. பல அறிஞர்கள் இந்தத் தூதில் தமது பங்கை நிறைவேற்றுதல் என்பது அனுமதித்தல், உதவுதல், பலப்படுத்தல் என்ற கருத்தில் அரசிலேயே தங்கியுள்ளது எனக் கருதுகின்றனர், இந்த வகையில் இவ்விடயம் அரசு சார்ந்தது என்ற கருத்து பெரும்பாலும் ஆழப் பதிந்து போய்விட்டது.

1) இக்கருத்து மார்க்கத்தின் கருத்துக்களை சீர்கெடுப்பதாகவும், அதன் கட்டமைப்பைக் குலைத்துப் புரட்டி விடுவதாகவுமே அமையும். இக்கட்டுரையை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை வாசிப்பதனூடாக இது தெளிவாகும்.

2) இப் பெரும் காரியத்தை அரசு மாத்திரம் தனியாகச் சுமப்பது சாத்தியமற்றது. இப்பணியை முன்னின்று இழுத்துச் செல்லவும் அதனால் முடியாது. அப்பணியின் முக்கிய பெரும் தரப்பாக இருப்பதுவும் அரசுக்கு முடியாததாகும்.

3) பல சந்தர்ப்பங்களில் இப்பணியைச் சுமக்க பொருத்தமற்றதாக அரசு இருக்கும். அல்லது இப்பணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு விருப்பமிருக்காது. அல்லது அதற்கான தகுதியை அது பெற்றிருக்காது. அரசு அதன் உள் நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளின் காரணமாக பல காரணங்களால் இப்பணிக்கு எதிராக இருப்பது வும், அதனை மறுத்து நிற்பதுவும் கூட சாத்தியமே.

சமூகமே இப்பொறுப்பை சுமக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை இப்போது விளங்குவோம்:-

1) அல்லாஹ் இவ்விடயத்தில் அனைத்து முஸ்லிம் களையுமே விளித்துப் பேசுகிறான். அவர்கள் அனைவர் மீதும் இப்பொறுப்பையும், கடமையையும் சுமத்துகிறான். ஆட்சித் தலைவர்களை விளித்து அவன் பேசவில்லை. அறிஞர்களோடு இப்பொறுப்பை சுமப்பதை நிறுத்திவிடவு மில்லை. ஏழைகளை விட்டு விட்டு பணக்காரர்களுக்கே இப்பொறுப்பு உரியது எனக் கூறவுமில்லை. அல்லாஹ் கூறுகிறான்:

''நபியே கூறுவீர்களாக: இது எனது பாதை. அல்லாஹ்வின் பக்கமாக நானும் என்னைப் பின்பற்றியோரும் ஓர் ஆழ்ந்த தெளிவுடன் அழைக்கிறோம்.'' (ஸுரா யூசுப்- 108)

இறைநம்பிக்கையாளர்களே, உங்களை வேதனை தரும் தண்டனையிலிருந்து காக்கும் ஒரு வியாபாரத்தைக் காட்டித் தரட்டுமா?!

அல்லாஹ்வையும், அவனது தூதரையும் நம்பிக்கை கொள்ளுங்கள். உங்களது செல்வங்களாலும், உங்களது உயிர்களை அர்ப்பணித்தும் அல்லாஹ்வின் பாதையில் போராடுங்கள். நீங்கள் அறிந்திருந்தால் உங்களுக்கு இதுவே சிறந்ததாகும். (ஸுரா ஸப் - 50,51)

இஸ்லாத்திற்கான பிரச்சாரத்தை மேற்கொள்வதும் இஸ் லாத்தின் தூதை எல்லா மக்களிடமும் கொண்டு செல்வதும் நபிமார்களது பணி போன்றே நபிமார்களைப் பின்பற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து முஸ்லிம்களதும் பணியாகும். விதிவிலக்கு இதில் உள்ளது, குறிப்பானதொரு வரையரை இவ் விடயத்தில் உள்ளது என வாதிடுவோர் அதற்கான ஆதாரத்தைக் கொண்டு வரட்டும்; உண்மையில் அப்படியான ஆதாரமெதுவும் கிடையாது. இவ்வாறானது தான் அல்லாஹ்வுக்கு உதவுதல் என்ற அவனது மார்க் கத்திற்கு உதவுவதுவும், போராடுவதும், அவனது பாதை யில் உயிர்களையும் செல்வங்களையும் அர்ப்பணிப்பதுவு மாகும். இப்பகுதியிலும் அறிஞர்கள் அல்லது சமூகத் திற்கான உபதேசகர்கள் அல்லது வெற்றியாளர்கள், அல்லது இராணுவத்தலைவர்கள் என்போர்களை விளித்து அல் குர்ஆன் பேசவில்லை. ''இறைநம்பிக்கையாளர்கள்'' அனைவரையும் விளித்தே அல்லாஹ் பேசுகிறான்.

2) மார்க்கத்தைப் பாதுகாப்பது அதற்கு உதவுவது என்பது மிகப்பாரமான பெரியதொரு பொறுப்பு. சமூகத்தின் ஒரு பிரிவினர் அல்லது இரு பிரிவினர் மட்டும் இப்பொறுப்பை சுமந்து விட முடியும் எனக் கருத முடியாதளவு மிகவும் மகத்தான, அதி முக்கியத்துவம் வாய்ந்ததொரு பொறுப்பு இது. இந்தவகையில் குறிப்பிட்ட ஒரு பிரிவினர் இப் பொறுப்பை சுமக்க விடப்பட்டால் அப்போது குறிப்பிட்ட அப்பிரிவினர் பலவீனப்படல், குறைபாடுகள் விடல் அல்லது தொகையில் குறைவு ஏற்படல், உதவியாளர்கள் எண்ணிக்கை குறைதல் அல்லது குறிப்பிட்ட பிரிவினர் இல்லாது பின்வாங்கிப்போதல் என்ற நிலைகள் தோன்றுவது இயல்பு. ஆனால் இப்பொறுப்பை சுமக்கு மாறு முழு சமூகமும் வேண்டப்படும்போது, அனைவரின தும் பொறுப்பாக அது அமைகிறது. ஆண்கள், பெண்கள், ஏழைகள், தனவந்தர்கள், வியாபாரிகள், தொழிலாளிகள், தலைவர்கள், சாதாரண கூலிவேலையாட்கள் போன்றவர் களை உள்ளடக்கிய முஸ்லிம்கள் அனைவரும் அப் பொறுப்பை அப்போது சுமப்பர். அப்போது அந்தப் பெரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமானிதத்தை சுமப்பதற்கும், அதனைக் கவனித்து வரலுக்குமான சந்தர்ப்பங்கள் மிக அதிகமானதாகவும், பல்வேறுவகைப்பட்டதாகவும் அமையும். அந்நிலையில் சமூகம் எவ்வளவு பெரும் துன்பங்களுக்கும், அழிவு களுக்கும், பின்னடைவுகளுக்கும் உட்பட்டாலும் அவற்றி லிருந்து மீள்வதற்கும், எழுச்சி பெறுவதற்குமான சந்தர்ப்பங்கள் மொத்த சமூகத்தின் ஏதாவதொரு பிரிவி னருக்கு மத்தியிலாவது காணப்படல் மிகவும் சாத்தியம். எனவே இஸ்லாத்திற்கான போராட்டம் மறுமைநாள் வரையில் தொடர்ந்து கொண்டே இருக்கும். சமூகத்தின் ஒரு பிரிவினர் மறுமைநாள் வரையில் சத்தியத்தின் மீது நிலைத்து வெற்றிபெற்றவர்களாகவே இருப்பர்.[1] சமூகத்தின் அதிமோசமான நீண்ட இருண்ட காலப்பிரிவிலும்கூட இந்நிலை காணப்படும்.

3) இம்மமகத்தான அமானிதத்தை, பாரிய பொறுப்பை அரசின் மீதும் அரசைச் சுற்றி நிற்போர் மீதும் சுமத்தவது அதனைப் பாரிய அபாயத்திற்குட்படுத்தியதாக அமையும். குறிப்பாக அரசு இறைவழியில். அமையாது அதிகாரப் போட்டியின் வெற்றி மீது அமையும் போதும், வழிபிறழ்ந்து சீர்கெட்டு நிலையில் இருக்கும்போதும் இது உறுதியாகிறது. அரசின் இத்தகைய நிலை எமது வரலாற்றில் கொஞ்சமல்ல. அரசின் நிலை இவ்வாறிருக் கையில் மார்க்கத்தை சுமப்பதுவும், உலகத்தாருக்கு அதன் தூதை எத்திவைப்பதுவும் அவ்வரசால் எப்படி நிறைவேறப் போகிறது?! அரசு, உட்பூசல்கள் நிறைந்து பல குழப்ப நிலைகளை எதிர்கொண்டு போராட்டங்களில் மூழ்கிவிடும் போதும், அல்லது அரசு குலைந்து, சிதறுண்டு போகும் போதும் தூதை சுமப்பதைப் பொறுத்தவரையில் அது எப்பங்கையும் வகிக்காது.

---

[1] இது ஒரு ஆதாரபூர்வமான ஹதீஸ். அதனையே இங்கு ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கத்தைப் பாதுகாப்பதில் சமூகத்தின் நிலையைப் பொறுத்தவரையில், ஒரு பொது அழிவு அதன் எல்லாப் புறங்களையும் சூழ்ந்த வகையில் வர மாட்டாது; அதனை அழித்து விடும், அதன் கட்டமைப்பை முழுமையாக சிதறச் செய்யும் எதிரியொன்று வெளியிலிருந்து ஆதிக்கம் பெறமாட்டான் என்ற அல்லாஹ்வின் வாக்குறுதி உள்ளது. சமூகத்தின் சில பகுதிகளை இத்தகைய அழிவுகள் எதுவும் தீண்ட முடியும். ஆனால் வளங்களும் செல்வங்களும் அப்படியே இருக்கவே செய்யும்.

தீமையை அகற்றலும், சீர்கேடுகளோடு போராடலும்:-

தீமை தோன்றினால் அதனை அகற்றுவதும், சீர்கேடுகள் ஊடுருவ முயன்றால் அதனோடு போராடுவதுவும் சமூகத்தின் இன்னொரு பணி. எனினும் இப்பணியும் வரையறுக்கப்பட்டு குறுக்கப்பட்டுப் போய்விட்டது. பல்வகை முறைகளைக் கையாண்டும் பல கருத்துக்களை முன்வைத்தும் இப்பணியை செய்ய விடாது பொதுமக்கள் தடுக்கப் பட்டு விட்டனர். அல்லது அவர்கள் அப்பணியை செய்வதற்கான இடம் மிகவும் ஒடுங்கியதாக ஆக்கப்பட்டு விட்டது. ஆனால் பொதுமக்கள் மீது அவர்களில் ஆண்கள், பெண்கள் அனைவர் மீதும் இப்பணி சுமத்தப்பட்டுள்ளது என விளக்கும் திருமறை வசனங்களும் சுன்னாவின் வசனங்களும் தெளிவாகவும், மிக அதிகமாகவும் காணப் படுகின்றன. அவர்கள் அப்பணியைத் தமது கிராமங்களிலும், நிறைவேற்ற வேண்டும். அவர்களது ஆட்சியாளர்கள், சமூகத்தின் உயர்மட்டத்தினர் அனைவர் மத்தியிலும் நிறை வேற்ற வேண்டும்.

தீமையைக் கையால் தடுப்பது அரசுக்குரியது. நாவால் தடுப்பது - அதுவும் சில நிபந்தனைகளோடும், கட்டுப்பாடு களோடும் அறிஞர்களுக்குரியது. சமூகத்தைப் பொறுத்த வரையில் எஞ்சி நிற்பது உள்ளத்தால் தடுப்பது மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். அதாவது தீமையைத் தடுத்தல் என்ற நடைமுறைச் செயற்பாடு சமூகத்திற்குக் கிடையாது. அரச செயற்பாடுகள் உருவாக்கிய ஆச்சரியமான அரசுசார் சட்டத்தீர்வுகளில் ஒன்று இது.

நிறைய அல்-குர்ஆன் வசனங்களும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வார்த்தைகளும் தீமையைத் தடுப்பதிலும், சீர்கேடுகளை ஒழிப்பதிலும் முடியுமானளவு ஈடுபடல் சமூகப் பொதுக்கடமை என்பதற்கே ஆதாரமாக உள்ளன. அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.

இறைநம்பிக்கையாளர்களான ஆண்களும், பெண்களும் ஒருவருக்கொருவர் பொறுப்புதாரர்கள். அவர்கள் நன்மையை ஏவ வேண்டும். தீமையைத் தடுக்க வேண்டும். (அத்தியாயம் : தவ்பா - 71)

நீங்கள் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மிகச் சிறந்த சமூகத்தினர். நன்மையை ஏவி, தீமையைத் தடுக்கும் பணியில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள். (அத்தியாயம்: ஆலஇம்ரான் - 110)

உமது இரட்சகன் நகர்களை அவற்றில் காணப்படும் அநியாயங்கள் காரணமாக, அங்குள்ளோர் சீர்திருத்தங்களில் ஈடுபடும் நிலையில் அழிக்கக்கூடியவனன்று. (அத்தியாயம்: ஹூத்-117)

சீர்திருத்தங்களில் முதன்மைப்பட்ட விடயம் சீர்கேடுகளை ஒழிப்பதாகும். இப்பகுதியில் வரும் ஹதீஸ்களை நோக்கினால் அவை இவ்விடயத்தை சமூகப் பொதுக்கடமை எனப் பேசுவதிலும் சரி, அத்தகைய ஹதீஸ்களின் எண்ணிக்கையிலும் சரி அல்குர்ஆனுக்குக் குறைந்ததாக இல்லை என்பது தெளிவு. அவற்றில் பிரபல்யமான ஒரு ஹதீஸ் கீழ்வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உங்களில் யாரேனும் தீமையொன்றைக் கண்டால் கைகளால் தடுக்கவும். முடியாவிட்டால் நாவால் தடுக்கட்டும். அதுவும் முடியாவிட்டால் உள்ளத்தால் தடுக்கட்டும். இதுவே இறை நம்பிக்கையின் மிகப் பலவீன நிலையாகும். (ஸஹீஹ் முஸ்லிம் - இமாம் நவவியின் விளக்கவுரையோடு 2:21)

நெறி பிறழ்ந்த ஆட்சியாளர்கள் பற்றிக் கூறும் கீழ்வரும் ஹதீஸும் அவற்றிலொன்று:
''அவர்களோடு யார் கைகளால் போராடுகிறாரோ அவர் இறைநம்பிக்கையாளர். அவர்களோடு நாவால் போராடு பவரும் இறைநம்பிக்கையாளர். உள்ளத்தால் அவர்களோடு போராடுபவரும் இறைநம்பிக்கையாளர். இதற்கு அப்பால் இறைநம்பிக்கையில் கடுகளவேனும் கிடையாது. (மேற்படி நூல்)

இவ்விரு ஹதீஸ்களிலும் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தீமையைத் தடுப்பதையும் அதனை ஒழிக்கப் போராடு வதையும் இறைநம்பிக்கை வேண்டி நிற்கும் ஒரு விடயமாக மட்டும் காட்டாது, இறை நம்பிக்கையின் ஒரு வகையாகவும். அதன் ஒரு பகுதியாகவும் விளக்கியுள்ளமை தெளிவு. இறைநம்பிக்கையின் பலமும், பலவீனமும் அதன் பூரணத்துவமும், அது குறைவுபடலும் ஆட்சியாளர் கள், அறிஞர்களுக்கு மட்டும் உரியதல்ல. அது அனைத்து இறைநம்பிக்கையாளரோடும் சம்பந்தப்படும் விடயம். எனவேதான் ஸஹீஹ் முஸ்லிமில் இந்த ஹதீஸ் இறை நம்பிக்கை -ஈமான்- பற்றிய அத்தியாயத்தின் கீழ் வருகிறது. இக்கருத்தை நன்கு விளக்கும் வகையில் கீழ்வரும் தலைப்பின் கீழ் அவை வருகின்றன. ''தீமையைத் தடுப்பது இறைநம்பிக்கை -ஈமானில்- ஒன்று, இறைநம்பிக்கை கூடிக் குறையும், நன்மையை ஏவலும், தீமையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுத்தலும் கடமையானவையாகும் என்பது பற்றிய விளக்கத்தைத் தரும் அத்தியாயப் பிரிவு''; (ஸஹீஹ் முஸ்லிம் - இமாம் நவவியின் விளக்கவுரையோடு 2:21)

ஹதீஸில் குறிப்பிடப்பட்டிருக்கும் தீமையைத் தடுத்தலுக்கான தராதரங்கள் பிற்கால அறிஞர்கள் சிலர் கூறுவது போன்று ஆட்சியாளர்கள், அறிஞர்கள், பொதுமக்கள் என்பவர்களிடையே பிரியும் எனக் கொள்வது பொருத்த மற்றதாகும். மாறாக தராதரங்களும் அனைத்து முஸ்லிம்கள் மீதும் அவர்களது சக்தியைக் கவனத்திற் கொண்டு மட்டும் பிரியும்.

இப்பகுதியில் அவதானிக்கத் தக்க ஒரு ஆச்சரியமான முரண்பாடு என்னவெனில் இமாம் குர்துபி போன்றவொரு அல்குர்ஆன் விரிவுரையாளர், அறிஞர். "இறைநம்பிக்கையாளர்களான ஆண்களும், பெண்களும் ஒருவருக் கொருவர் பொறுப்புதாரர்கள் ஆவார்கள். அவர்கள் நன்மையை ஏவ வேண்டும், தீமையைத் தடுக்க வேண்டும்'' (தவ்பா - 73) என்ற வசனத்திற்கு விளக்கம் சொல்லும் போது நன்மையை ஏவலும், தீமையைத் தடுத்தலும் இறைநம்பிக்கையாளர்களின் மிக விஷேடமான பண்பாகும், அது இறைநம்பிக்கையாளரையும் நயவஞ்சகர் களையும் பிரித்துக்காட்டும் அம்சமாகும் என மிகச் சரியாகவே கூறிவிட்டு அதனை அடுத்து இக்கருத்தையே உடைக்கும் முரண்பட்ட இன்னொரு கருத்தைக் கூறுகிறார். நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல் என்பது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரியதல்ல. தண்டனைகளை நிறை வேற்றல், வரையறுக்கப்படாத தண்டனைகளை வகுத்தல், சிறையிடுதல், நாடுகடத்தல் போன்ற தண்டனைகளை வழங்கும் அதிகாரம் ஆட்சியாளருக்க உரியது என்ற வகையில் நன்மையை ஏவித் தீமையைத்தடுத்தலும் அவரது அதிகாரமாகும். அவர் ஒவ்வொரு பகுதிகளிலும் நம்பிக்கைக்குரிய நாணயமிக்க, அறிவுத்தரமுள்ள, சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தை கொண்ட ஒருவரை இதற்காக நியமிப்பார்.''
(அல் ஜாமிஉ லி அஹ்காமில் குர்ஆன் 4:47)

இக்கருத்தின்படி இவ்வாறு இறைநம்பிக்கையாளர்களான ஆண்களும், பெண்களும் ஒரு மனிதனில் ஒடுங்கிப் போகிறார்கள். அந்த ஒரு மனிதரும் இருக்கலாம், இல்லாமல் போகலாம், அப்பணியைச் செய்ய அவர் போது மாகலாம், போதாமல் போகலாம், அங்கு நிகழும் விடயங் கள் பற்றி அவருக்குத் தெரிய வரலாம், தெரிய வராமலும் போகலாம். இவரது செயற்பாடுகள் சரியாக அமையலாம், தவறாகவும் அமைந்து விடலாம். இவர் சீரான வாழ்வு கொண்டவராக இருக்கலாம், நெறிபிறழ்ந்தவராகவும் அமைந்து விடலாம்.

இவ்வாறெல்லாம் அமையும் நிலை ஆட்சியாளன் என்ற அத்தனி மனிதனுக்கு நேரலாம் எனும் போது இவ்விட யத்தை அவனில் மட்டும் ஒடுக்குவது எப்படிப் பொருத்த மாக முடியும்?! அத்தோடு இன்னொரு விடயத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.இவரை மாற்ற வேண்டி வந்தால் எவ்வாறு மாற்ற முடியும்? எப்போது அவர் மாறுவார்? பொதுமக்கள் முன்வந்து முறையீடுகள் செய்து, எதிர்த்துப் பேசினால்தான் இவரை மாற்றுவது சாத்திய மாகும். ஆனால் பொதுமக்களுக்கு இக்கருத்தின் படி தங்களைப் போன்ற ஒருவர் செய்யும் தீமைகளை எதிர்க்கும் உரிமையே இல்லாதபோது ஆட்சித் தலைவரின் பிரதிநிதி யாக இருக்கும் அவராலேயே நியமிக்கப்பட்ட ஒருவரைத் தடுப்பது, எதிர்ப்பது எப்படி சாத்தியமாகும்.

அல்லாமா குர்துபி நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல் என்பது ஆட்சியாளனோடு நின்று விடுகிறது என்பதற்கு கீழ்வரும் இறைவசனத்தை ஆதாரமாகக் கொள்கிறார்:
''அவர்களுக்கு நாம் பூமியில் அதிகாரத்தைக் கொடுத்தால் அவர்கள் தொழுகையை நிலைநாட்டுவார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸகாத்தைக் கொடுப்பார்கள், நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பார்கள். (அத்தியாயம்: ஹஜ் - 39)

இது பிழையானதொரு கருத்திற்கு அது போன்றே பிழையாகப் புரியப்பட்ட ஓர் ஆதாரத்தைக்காட்டுவதாகவே அமைகிறது. வசனத்தில் வரும் அதிகாரம் கொடுத்தல் என்ற பிரயோகத்தை ஆட்சியாளர்கள் வெற்றி கொண்டு ஆட்சியைப் பெறல் என்ற கருத்தில் இங்கு கொள்ளப் பட்டுள்ளது. உண்மையில் 'அதிகாரம் கொடுத்தல்' என்ற பிரயோகம் பொதுவான கருத்தையே கொடுக்கும் 'அவர் களுக்கு' என்ற சொல் பொதுக் கருத்தைக் கொடுக்கும் பிரயோகம் என்பதில் சந்தேகமில்லை. இந்த வசனம் ஆட்சியாளர் களுக்குரியவை பற்றிப் பேசுகிறது எனக் கொண்டால் தொழுகையை நிலை நாட்டல், ஸகாத் கொடுத்தல் என்பவையும் அவர்களேயே குறிக்கும் என்று கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் வசனம் ஒன்றே. விளித்துப் பேசப்படுபவர்களும் ஒரு சாராரே.

அதிகாரம் கொடுக்கப்படல் என்பது சமூகத்திற்கானது என்ற பொதுக்கருத்தையே குறிக்கும்; ஆட்சியாளர்களை மட்டுமே அது குறிக்காது என்ற கருத்தை கீழ்வரும் இன்னொரு வசனம் தருகிறது.

''உங்களில் இறை நம்பிக்கை கொண்டு சீரான செயல்கள் புரிவோருக்கு முன்பிருந்தோருக்கு ஆட்சி அதிகாரத்தை அவன் கொடுத்தது போன்று நிச்சயமாக ஆட்சியதி காரத்தை கொடுப்பான். அவன் திருப்தியாக ஏற்றுக் கொண்ட அவர்களது மார்க்கத்தையும் நிலை பெறச் செய்வான். பயம் நிறைந்த வாழ்க்கையை மாற்றி பாதுகாப் பான வாழ்க்கையைக் கொடுப்பான் என அவன் வாக் குறுதி அளிக்கிறான். அவர்கள் என்னை வணங்கிவழிபட வேண்டும், எனக்கு எதனையும் இணைவைக்கக் கூடாது (அத்தியாயம் நூர்-55) இக்கருத்து மிகவும் தெளிவானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்க வேண்டிய அவசியமில்லை.

இவ்விடத்தில் சிலர் ஒரு கருத்துக் குழப்பத்திற்கு உட்படுகின்றனர். தீமையைக் கையால் தடுத்தல் என்பது ஆயுதம், யுத்தம், ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கிளம்பல் என்று அவர்கள் நினைத்து விடுகிறார்கள். தீமையைத் தடுத்தலை ஆட்சியாளர்கள் செய்கிறார்கள் இக்கருத்து இன்னும் வலுவடைகிறது. ஆனால் இது சரியான போக்கில் அமைந்த விளக்கமன்று. கையால் தடுத்தல் என்றால் ஆயுதம் தாங்கித்தான் தான் போராட வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. இமாம் இப்னு ரஜப் அல்ஹன்பலி இக்கருத்தை கீழ்வருமாறு விளக்குகின்றார். கையால் தடுத்தல் என்பது யுத்தம் புரிதலைக் கட்டாயமாக்காது இமாம் அஹ்மதும் இதனை விளக்கியுள்ளார். ''கையால் தடுத்தல் என்பது வாளால், ஆயுதங்களால் தடுத்தல் என்ற கருத்தைக் கொடுக்காது. மாற்றமாக ஆட்சியாளர்களோடு கையால் போராடல் என்பது அவர்கள் செய்த தீமைகளைக் கையால் நீக்கிவிடல் என்ற கருத்தைக் கொடுக்கும். மதுவை கொட்டி எறிதல், வீண்விளையாட்டுக்கான கருவிகளை உடைத்தெறிதல், அவர்கள் கட்டளை பிறப்பித்துள்ள அநியாயங்களை சக்தியிருந்தால் நடக்க விடாது செய்தல் போன்றவற்றை இதற்கு உதாரணமாக காட்டலாம். இவை அனைத்தும் அனுமதிக்கப்பட்ட தாகும். இது அவர்களோடு யுத்தம் புரிவதாக அமையாது, அவர்களுக்கு எதிராகக் கிளம்புவதாகவும் கொள்ளப்பட மாட்டாது''.

பொதுமைப்படுத்தலுக்கும், வரையறுத்தலுக்கு மிடையே ஷரீறா என்ற உரிமை;

ஷரீறா என்பது அரசினதும், ஆட்சியாளர்களினதும் விவகாரம் என்று நோக்குவது பொதுமக்களதும், அதிகமான அறிஞர்களினதும், சிந்தனையாளர்களினதும் வழக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகப் போய் விட்டது. ஷூறா என்ற கடமை, ஷுறாவின் முடிவைக் கடைப்பிடித்தலின் கடமைப்பாடு அது பிரயோகிக்கப்படும் பகுதிகள் என்பது பற்றிப் பேசலே இவ்விடயத்தில் வழக்காக உள்ளது. ஷூறா என்ற கடமை ஆட்சியாளர்களை விளித்துப் பேசப்பட்டதாகும்; அவர்களது விவகாரமே அது என்ற கொள்கையின் உள்ளிருந்துதான் இவை அனைத்தும் ஆராயப்படுகின்றன. பின்னர் அதனை அவர்களது பார்வையும், ஆய்வும் எங்கு இட்டுச் செல்கிறதோ அங்கு இடமே அவர்கள் முயல்கிறார்கள். ஷூறாவுக்குத் தகுதியானவர்கள், அதற்கான தரமுடையவர்கள் என நோக்கி அவர்களையே அதில் பங்குகொள்ளச் செய்கின்றார்கள். இந்நிலையில் அது மேலிருந்து கீழிறங்கும் ஷூறாவாக அமைந்து விடுகின்றது. அதாவது பிரமிட்டின் உச்சியிலிருந்து நடுப்பகுதிக்கும் சிலபோது அடிப்பகுதிக்கும் அது இறங்கி வருகிறது. ஷுறாவுக்கான முறைமை, அதற்கான ஆட்தொகை என்பவை பற்றிய ஆட்சியாளனின் கணிப்பீட்டிற்கு ஏற்ப இவ்வாறு இறங்கி வரல் அமைந்துவிடுகிறது.

எனது பார்வையில் மேற்குறிப்பிட்டதன் தலைகீழ் நிலையே சரியானது. அதுவே எனது பார்வையில் சாத்திய மாகும். ஷூறா என்பது முழு சமூகத்தினதும் விவகார மாகும். சமூகமே அதன் சொந்தக்காரன், அதன் உரிமையே அது. அதனை வரையறுப்பது, அதனை ஒழுங்குபடுத்தி கட்டமைப்பது, அதனைப் பொறுப்புச்சாட்டுவது அனைத்தும் அதனுடைய உரிமையாகும். இதற்கான ஆதாரம் அல்லாஹ்வின் வார்த்தைகளும், இறைதூதர் (ஸல்) அவர்களின் செயல்களுமாகும். அல்லாஹ் கீழ்வருமாறு கூறுகின்றான். ''மேலும் அவர்கள் தங்களது இரட்சகனுக்கு பணிந்து பதிலளித்தார்கள் தொழுகையை மிகச் சரியாக நிறைவேற்றினார்கள். அவர்களது விவகாரங்கள் அவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் படி அமையும். நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தவற்றிலிருந்து அவர்கள் செலவழிப்பார்கள்''. (அத்தியாயம் - ஷூறா - 38)

முதலாவது இந்த வசனம் முஸ்லிம்கள் மீது அவர்களுக் கென அரசொன்று தோன்ற முன்னர் இறங்கியது. எனவே இந்த வசனம் நேரடியாகவும், அடிப்படையாகவும் முஸ்லிம்களினுடனேயே பேசுகிறது. வசனத்தின் வார்த்தை களும், அது பேசும் யதார்த்தமும் முஸ்லிம் பொது மக்களையே குறிக்கிறது. அவர்களது அரசனையோ, ஆட்சி யாளர்களையோ, ஆட்சிபீடத்தையோ அது குறிக்க வில்லை.

இரண்டாவது இந்த வசனத்தில் ஷூறா என்பது அதற்கு முன்னாலும் பின்னாலும் வந்த விவகாரங்கள் எவ்வாறானதோ அவ்வாறானதாகும். அதாவது அல்லாஹ் வுக்கு பணிந்து பதில் சொன்ன, தொழுகையை மிகச்சரியாக நிறைவேற்றிய, ஸகாத்தை நிறைவேற்றிய அந்த முஸ்லிம் சமூகத்தின் பண்புகளில் ஒன்றே அதுவாகும்.

அல்லாஹ் தனது தூதருக்கு ஷூறாவைக் கட்டளையாகக் கொடுத்தபோது அதனை வரையறுத்த ஒரு பிரிவினருக்கு மட்டும் உரியது என அமைக்கவில்லை. முஸ்லிம் பொது மக்கள் அனைவருக்குமான உரிமையாகவே அமைத்தான். ''விவகாரங்களில் அவர்களுடன் கலந்தாலோசிப்பீராக'' என்று தான் அல்குர்ஆன் கூறியது. ஷூறா பற்றி வந்த கட்டளையின் முன்னால் வந்த கட்டளைகளை அல்லது வசனங்களை அவதானித்தால் அவை பொதுமைத்தன்மை கொண்டன; வரையறுத்த போக்கை கொண்டதல்ல என்பதில் யாரும் சந்தேகம் கொள்ள முடியாது.

''அல்லாஹ்வின் அருளால் அவர்களுடன் நீர் மிருதுவாக நடந்து கொண்டீர். முரட்டுத்தன்மை கொண்டவராகவும், கடின இதயம் கொண்டவராக நீர் இருந்திருந்தால் உம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு அவர்கள் கலைந்து ஒதுங்கிச் சென்றிருப்பர். அவர்களை மன்னித்து விடுவீராக அவர்களுக்காக பாவ மன்னிப்புக் கேட்பீராக. விவகாரங்களில் அவர்களோடு ஆலோசனை செய்வீராக''.(ஸூறா ஆல இம்றான் : 159)

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்ட ஏதாவதொரு விடயம் ஆட்சியாளர்களை, அறிஞர்களை, படைத்தளபதியை மாத்திரம் குறிக்க முடியும் என்று கூறமுடியுமா?

முரட்டுத்தனமின்றி, கடின இதயமின்றி மிருதுவாக யாருடன் உறவாடப்பட வேண்டும் என்று யாரைக் குறிக்கப்படுகிறதோ அவர்களையே ஆலோசனைகளில் இணைத்துக் கொள்ளுமாறும் வேண்டப்படுகிறது. அவர்கள் பொதுவாக முஸ்லிம்கள், முஸ்லிம் பொதுமக்கள் என்பதில் சந்தேகமில்லை. இறைதூதர் (ஸல்) ஆலோசனை கேட்பார்கள். அப்போது ''மக்களே எனக்கு ஆலோசனை சொல்லுங்கள்'' என்று கூறுவார்கள். ஷூறா அடிப்படையில் சமூக விவகாரத்தோடு சம்மந்தப்படும் அனைத்து முஸ்லிம்களுக்குமான உரிமையாகும். அல்லது குறைந்தது அவர்களில் முடியுமானளவு தொகையினருக்குரிய உரிமையாகும் என்பதை இதன் மூலம் இறைதூதர் (ஸல்) உணர்த்துகிறார்கள்.

ஷூறாவின் அடிப்படையும் இதுவே. ஆயினும் அது நடைமுறையாக ஒழுக்கமைப்பு தேவை. அந்த வகையில் தனக்கு பொருத்தமான, தனது நிலைகளுக்கு ஒத்துவரக் கூடிய பயன்தரக் கூடிய வகையில் ஷூறாவுக்கான கட்டமைப்பை உகுவாக்கிக் கொள்ளும் உரிமை ஒவ்வொரு சமூகத்திற்கும் உண்டு. இந்த வகையில் குறிப்பிட்ட சில விவகாரங்களில் ஷூறா செய்தலையும், முடிவெடுப்பதையும் குறிப்பிட்ட சில நபர்கள், பிரிவினர்களிடம் பொறுப்புச் சாட்டுவது அந்த ஷூறாவுக்கான கட்டமைப்புகளில் ஒன்றாகும். எனினும் மீளாய்வு செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றங்களைக் கொண்டுவரல் என்ற சமூகத்தின் உரிமையை இது நீக்கி விடாது. அவ்வாறே சமூகம் பிரதிநிதிகளை நியமித்து பொறுப்புச் சாட்டிய விடயங்களில் கூட அதற்கிருக்கும் அடிப்படை உரிமையை அது நீக்கி விடாது. அதாவது எந்த விவகாரங்களிலும் சரி எப்பகுதிகளிலும் சரி நேரடி ஷூறாவுக்கு வரும் உரிமை சமூகத்திற்குண்டு.

அல்லாஹ் முஸ்லிம்கள் தாமறியாத விடயங்களின் போது துறைசார் அறிஞர்களிடம் வினவுமாறு கட்டளையிட்டுள்ளான். ''நீங்கள் அறியாவிட்டால் அறிவுள்ளோரிடம் வினவுங்கள். தமக்கு அறிவில்லாத விடயங்களில் கருத்துச் சொல்லப் போக வேண்டாம் என அல்லாஹ் தடுத்துள்ளான்' (அத்தியாயம் நஹ்ல் 43) உமக்கு அறிவற்ற விடயங்களைப் பின்பற்றிச் செல்லாதீர். (அத்தியாயம் இஸ்ரா 36) எனவே முஸ்லிம்கள் குறிப்பிட்ட சில விவகாரங்களில் துறைசார் அறிஞர்களிடம் அபிப்பிராயம் பெறுவது கடமையாகும். அதுவும் கூட சமூகம் தன்னைப் பாதிக்கும் பொதுவிவகாரங்களின் போது நேரடியாக ஆலோசனை செய்யும் உரிமையை நீக்காது. ''அவர்களது விவகாரங்கள் அவர்களுக்கு மத்தியிலான கலந்தாலோசனையின் படி அமையும். சமூகம் முழுவதோடும் தொடர்புபடும் பொதுவிடயமாக இருந்தால் அது சமூகத்திற்குரியதாகும். சமூகமே அது பற்றிய கூட்டாய்வு, ஆலோசனை ஊடாக முடிவுக்கு வரவேண்டும். சமூகத்தின் ஒரு பகுதி சார்ந்ததாக அதாவது ஒரு பிரிவினர் ஒரு நகரம், கிராமம், சார்ந்ததாக இருப்பின்அது அத்தகையவர்களுக்கிடையேயான ஆலோசனையின் முடிவாக அமையும்.

இதுவே ஷூறாவின் அடிப்படையாகும். இந்த வகையில் ஷூறாவின் பரப்பை எந்தளவு விரிவுபடுத்த முடியுமோ அந்த அளவு விரிவுபடுத்தல் மிகச் சரியானதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியானதாகவும் அமையும். இந்த அடிப்படையை விட்டு விலகவோ, விதிவிலக்குகள் உருவாக்கவோ வேண்டுமா யின் தேவை, நலன் பொறுத்தும் அல்லது விஷேட ஆதாரமொன்றின் அடிப்படையிலும் அது அமைய வேண்டும்.

இந்த அடிப்படை கைக்கொள்ளப்படும் போதுதான் சமூகம் உயிரோட்டமும் விழிப்புணர்வும் செயற்திறனும் கொண்ட தாக அமைந்து பங்களிப்பு செய்யக்கூடியதாக அமையும். ஆனால் ஷூறா பற்றிய இறைவசனத்தைத் தலைகீழாக மாற்றி அது ஆட்சித் தலைவர்களுக்கு மத்தியிலான கலந்தாலோசனையாக அமையும் எனக் கொள்ளப்படும் போது ஆட்சியின் நிர்வாகப்பகுதித் தலைவர்கள் அதனை விரும்பியோ, விரும்பாமலோ தமது தலைவரிடம் ஒப்படைத்து விடுவர் அப்போது சமூகம் பொறுப்பிலிருந்து நீங்கிக் கொள்ளும். செயற்பாடற்ற, அக்கறையற்ற போக்குக்கு கீழிறங்கும். ஒவ்வொருவரும் தானுண்டு, தனது சொந்த விவகாரம் உண்டு என்ற நிலைக்காகி அதிலேயே மூழ்கிப் போய் விடுவர்.

சமூகம் அதிகாரம் பெறலும், அரசு அதிகாரம் பெறலும்

''நீங்கள் மக்களுக்காக உருவாக்கப்பட்ட மிகச் சிறந்த சமூகத்தினர்''. (அத்தியாயம்: ஆலஇம்ரான்-110) என அல்குர்ஆன் இஸ்லாமிய சமூகத்தை வர்ணிக்கிறது. இத்தகையதொரு சமூகம் தலைமைத்துவம் பெற்றிருப்பது வும், முன்னோடி சமூகமாகவும், அதிகாரமும், அந்தஸ்தும் உடையதாகவும் இருப்பதுவே இயல்பானது. இந்த அடிப்படைக் கருத்தின் மீது அதனை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கட்டியெழுப்பினார்கள். அந்த வழியிலே அது பல நூற்றாண்டுகள் வாழ்ந்தது; ஓடியது; உலகை ஒளிபெறச் செய்தது. வழிகாட்டலாலும், நீதியாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளாலும், அறிவாலும், ஒழுக்கப்பண்பாடுகளாலும் அவ்வுலகை நிரப்பியது.

அரசுக்கு முன்னால் சமூகம்தான் அதனது மார்க்க விவ காரங்களையும், அறிவு, கலாச்சார விவகாரங்களையும் திட்டமிட்டது, நிர்வகித்தது, நடாத்தியது. அதன் வாழ்க் கைப் பிரச்சினைகளையும் தீர்த்துக் கொடுத்தது. சமூகத் தேவைகளையும், கல்விக்கான செயற்திட்டங்களை நிறைவேற்றியதுவும் அந்த சமூகமே. அத்தோடு நாகரீக சாதனைகளை அதுவே சாதித்தது. அரசு சமூகத்தைத் தூண்டியது, உதவியது, ஒழுங்குபடுத்திக் கொடுத்தது. சிலபோது அரசு பலவீனப்பட்டுப் போனது. அப்போது சமூகமே அதனைச் சுமந்தது. வேறு சிலபோது அது நெறி பிறழ்ந்து சமூகத்தின் வேலைத்திட்டங் களுக்குத் தடையாக நின்றது. ஆனால் சமூகம் செயற்பாட்டுத்திறன் மிக்கதாக வும், தனது சக்திகளைப் புதிப்பித்து புணரமைத்துக் கொள்வதாகவுமே எப்போதும் இருந்துவந்துள்ளது.

உதாரணத்திற்கு வக்பு சொத்தின் பங்களிப்பு பற்றிய வரலாற்றுப் பக்கங்களை வெறுமனே புரட்டிப்பார்த்தால் இந்த உண்மையை புரிந்து கொள்ள முடியும். மார்க்க வாழ்விலும், கலாச்சார வாழ்விலும் வக்பின் பங்களிப்பு, ஏழைகள், வறுமைப்பட்டவர்கள், நோயாளிகள், தேவை கள் உள்ளவர்களது விவகாரங்களை ஏற்று நடாத்துவதில் வக்ப் அமைப்பின் சேவை, கல்வி நிறுவனங்களை நிறுவல், அவற்றை நிர்வகித்தல், அவற்றுக்கான செல்வங்களை ஒதுக்கல், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் செல விடல் என்ற பகுதியில் அது மேற்கொண்ட முயற்சிகள், ஜிஹாத் செயற்பாட்டை இயக்குதல், எல்லைப் புறங் களைப் பாதுகாத்தல் என்ற அதன் சேவைகள் இவ்வாறு பரந்து விரிந்து காணப்பட்டது அதன் செயற்திட்டங்கள். சமூகம் தனது சுதந்திரத்தையும், தனது செயற்திறனையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும்போது இத்தகைய பாரிய வேலைத் திட்டங்களை மேற்கொள்ள முடியும். இந்த வகையில் அதிகாரம், என்பது அரசுக்குரியது; சமூகத்திற்குரியதல்ல எனக் கூறி சமூகத் திடமிருந்து அதனைப் பறித்துக் கொள்வது எவ்வளவு பாரிய நஷ்டத்தை கொடுக்கும் என்பது தெளிவு.

சரியான நிலையில் அரசு அதிகாரம் பெறுவது என்பது சமூகம் அதிகாரம் பெறுவதன் ஒரு பகுதியாகவே இருக்கும். அவ்வாறின்றி சமூகம் அதிகாரம் பெறல் என்ற நிலையை நீக்கிவிட்டு, அரசு அதிகாரம் பெறல் என்ற நிலை தோன்றும்போது அரசின் கையில் அதிகாரம் குவியும். நிலைமை தலைகீழாக மாறும், அப்போது ''அடிமை தன்னை வளர்த்தெடுத்தவரை பெற்றெடுக்கும் நிலையை ஒத்ததொரு செயற்பாடு உருவாகும்.''[1]

''நாகரீக எழுச்சி, அதன் ஷர்த்துக்கள், அதன் ஆரம்ப உண்மைகள்'' பற்றி டாக்டர் ஸெய்யித் தஸ்கி ஹஸன் எழுதிய மிகச் சிறந்த ஆய்வொன்றை சில வருடங்களுக்கு முன் வாசித்தோம். அத்தோடு அவரது நண்பர் மஹ்மூத் முஹம்மது ஸபர் ''சமூகத்தின் வினைத்திறனை செம்மைப் படுத்தல், அடைப்பட்டுப் போன பாதையிலிருந்து வெளியேறல் சில கருத்துக்களும், அபிப்பிராயங்கள்'' என்ற ஆய்வையும் வாசித்தோம். அந்த ஆய்வில் டாக்டர் ஸெய்யித் தாஸ்கியின் ''அரசு திட்டமிடும் மூளை, சமூகம் செயற்படும் உறுப்புகள்'' என்ற கருத்தை என்னால் சீரணிக்க முடியவில்லை.

அதிகாரம் அரசுக்குரியது எனக் கூறி சமூகத்தை ஓரங்கட்டி அரசின் பின்னால் செல்லும் நிலையை ஏற்படுத்தும் கொள்கையின் உடன்பிறப்பே இக் கொள்கையுமாகும். இங்கு சமூகம் வெறுமனே உறுப்புகள், நடைமுறைப் படுத்தும் வெறும் சாதனம், கருவி எனக்கொள்ளப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. எதிர்ப்பக்கத்தில் சிந்தித்தல், திட்டமிடல், நிர்வகிக்கும் மூளை என்ற பங்கு அரசுக்குக் கொடுக்கப்படுகின்றது. இது சமூகத்தை ஓரங்கட்டலும், அதனை வீழ்ச்சிக்கும், பின்னடைவிற்கும் தள்ளிவிடலாகும்.

அரசுக்கு தலைமைத்துவ பணிகள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. ஆனால் சமூகத்தை ஓரங்கட்டி, அதன் அதிகாரங்களை இல்லாமல் செய்து, முன்னோடிச் செயற்பாடுகளை நீக்கிவிடும் ஓர் அரசு ஒரு போதும் பலமான, முன்னோடியான. புதுப்புது செயற்திட்டங்களை ஆக்கும் அரசாக இருக்க முடியாது.

அரசுமையப்படுத்தப்பட்ட சமூகம், அதிகாரத்தை அரசின் கையில் குவிக்கும். அனைத்துப் பணிகளையும் அரசு தன் கையில் வைத்துக் கொள்ளும். இந்நிலையில் அந்த சமூகக் கட்டமைப்பு ஆக்கத்திறனும், நாகரீகப் பங்களிப்பும் செய்யத் தகுதியான ஆயிரக்கணக்கான அல்லது பல மில்லியன் கணக்கான மக்களை செயற்பாடற்றவர் களாகவோ எதிர் நிலைப்பாடு கொண்டவர்களாக மாற்றி விடும். ஏனெனில் இக்கருத்தின்படி சிந்திப்பது அரசு, முன்னணி செயற்பாடுகளும் அரசுக்குரியது; மக்களுக்கோ அரசில் எந்த இடமும் கிடையாது என்ற நிலை தோன்றி விடுகிறது.

மாற்றமாக சமூகம் மையப்படுத்தப்பட்ட போக்கு, சிந்தனை, செயல், கருத்து என்பவற்றில் சமூகம் முன்ன

---

(1) மேற்கோளில் உள்ளது ஹதீஸொன்றின் ஒரு வசனம். இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் மறுமை நாளின் அடையாளங்கள் பற்றி ஜிப்ரீல (அலை) கேட்டபோதே இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். அதாவது இப்படியொரு தலைகீழ் நிலை தோற்றம் மறுமையின் அடையாளம் என இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். இக்கருத்து சமூகம்,அரசு என்ற இரண்டின் மீது பிரயோகித்து ஆசிரியர் இங்கு இக்கருத்தை விளக்குகிறார்.இது மிக ஆழ்ந்த,நுணுக்கமான ஒப்பீடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணியில் நிற்றல், அப்பகுதிகளில் சமூகத்தை உற்சாகப் படுத்தல், தூண்டுதல்- என்ற சிந்தனைப் போக்கை நாம் கடைப்பிடிக்கையில் சமூகம் அதன் எல்லாப் புறங்களிலும் இயங்கும். அனைத்து துறைகளும் வளர்ச்சி காணும். எல்லா வகை ஆக்க செயற்பாடுகளிலும் அது வீரியம் பெறும். இது அரசு, அதன் தலைமை, சமூகத்தை வளர்க்கும் அதன் பணி என்பவற்றில் எதிர்மறைப் பாதிப்பை ஏற்படுத்தவும் மாட்டாது. மாற்றமாக அரசுக்கு மேலும் பலத்தையும், ஆரோக்கியத்தையுமே அது கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன இஸ்லாமிய சிந்தனையினுள்ளே எனது பயணம்

இஸ்லாத்தை அதன் சிந்தனையை, கோட்பாடுகளைப் படிக்கக் கிடைத்தமை ஒரு பாக்கியம்; இறையருள். ஆனால் அது இலகுவாக சாத்தியப்பட்டவில்லை.

நளீமிய்யாவில் எனது இளமையின் முக்கிய பகுதிகள் கழிந்தன. மாணவனாக இருந்தமையையும் ஆசிரியனாக இருந்த அடுத்த இருபது வருடங்களையும் சேர்த்து இங்கே சொல்கிறேன். மனித வாழ்வின் மிக முக்கிய அக்காலப் பிரிவு பெரும்பாலும் அறிவு தேடலிலேயே கழிந்தது. அனுபவ சம்பாதிப்பும் அதில் இணைந்தது. ஆசிரியனாக இருந்த போதும் நான் உண்மையில் மாணவனாகவே இருந்தேன், வாசிகசாலையில் காணப்பட்ட பல நூல்களின் ஆசிரியர்களுக்கு. இந்த ஆசிரிய அனுபவத்தோடு இலங்கையின் களத்தில் ஓய்வு, ஒலிவு இன்றி, உணவு, உறக்கம், களைப்பு எதையுமே கவனத்திற் கொள்ளாது நீள, அகலத்திற்கு இஸ்லாமிய, இலட்சிய சமூகத்தைத் தேடி அலைந்து திரிந்தேன். அதுவும் ஒரு பெரிய அனுபவத்தைத் தந்தது.

நளீமிய்யாவின் அந்த மாணவப்பருவம் இனிமையானது; கசப்பானது; அருமையானது; வித்தியாசமானது. இளமையே இனிப்பும், உத்வேகமும், தூய்மையும், அர்ப்பணமும் நிறைந்தது. அதேவேளை கட்டுப்பாடுகளை விரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாது சுதந்திரமாகப் பறக்க விரும்பும் பருவம் அது. ஆனால் நழீமிய்யா ஒரு மார்க்கக் கல்வி நிறுவனம். உடையில் தொடங்கி உறக்கம் வரை கட்டுப்பாடு. நான் இலட்சிய உலகு என்ற உணர்வில் மிதந்தேன். ஆரம்பத்தில் மௌதூதி யின் நூல்கள் அடுத்து ஸையித் குதுப: எந்த மனிதனையும் ஆகர்ஷிக்கும் அந்த எழுத்துக்கள்; வாதங்கள் வேறொரு உலகுக்கே எடுத்துச் செல்லும் அந்தத் தத்துவ விளக்கங்கள். அவற்றில் மூழ்கிய எனக்கு கட்டுப்பாடுகள் ஒரு பொருட் டாகத்தெரியவில்லை.

இப்படி ஆரம்பித்தது அறிவு வாழ்வு. இஸ்லாத்தை முறை யாகவும், ஒரு பாடத்திட்ட ஒழுங்கிலும் கற்பது எவ்வாறு? என்பது எமக்குக் கிடைக்கவில்லை. தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ்-இஸ்லாமிய சட்டக்கலை- இப்படி சிதறிய சில பாடங்கள். அவற்றில் எதுவுமே முழுமை பெறவில்லை. இஸ்லாம் பற்றிய முழுப் பார்வையையும் அப்பாடங்கள் தரச் சக்தியற்றிருந்தன. இந்த வகையில் வெறும் பாடங்கள் மட்டும் இஸ்லாத்தைப் பற்றிய தெளிவைத் தர முடிய வில்லை.

வெளி வாசிப்பு எப்படி அமைய வேண்டும் என்பதுவும் மாணவர்களுக்குத் தெரிய வாய்ப்பு அங்கிருக்கவில்லை. சிதறி, கிடைப்பவற்றை வாசிப்பதாக அமைந்தது எனது வாசிப்புக்கள். முதலில் மௌதூதி, ஸையித் குதுப், முஹம்மத் குதுப். சட்டமியற்றும் அதிகாரம், கிலாபத், அரசு, இஸ்லாமிய இலட்சிய சமூகம் என்ற கருத்தியல் களுக்கு அழுத்தம் கொடுக்கும் அந்த நூல்கள். இந்தப் பின்னணியில் இலட்சியவாத இஸ்லாமிய சமூக அமைப்பு, கிலாபத், அரசு பற்றிய பின்னணியிலிருந்து இஸ்லாத்தை விளங்கியதோடு, இஸ்லாம் ஒரு பூரணமானதொரு வாழ்க் கைத் திட்டம் என்பதையும் மிகவும் தெளிவாகப் புரிந்து கொண்டேன். ஆனால் அரசு, சமூக அமைப்பு என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அடிப்படை, அது இன்றி இஸ்லாமிய வாழ்வே கிடையாது எனப் புரிந்து கொள்ளும் நிலையே ஏற்பட்டது. இந்தக் கருத்திற்கேற்ப பல மாணவர்களையும் என்னைச் சூழ இணைத்துக் கொண்டேன். இலங்கையின் பல பகுதி களிலும் இக்கருத்தை விளக்கி நிகழ்ச்சிகள் நடாத்திச் சென்றோம். இந்தச் சிந்தனையின் பின்னால் ஒரு இளைஞர் கூட்டமே திரளத் துவங்கியது.

இஸ்லாம் பற்றிய இந்தப் பொது அறிவுப் பின்னணியோடு இஸ்லாமியப் பொருளாதாரம், அரசியல், மனோ தத்துவ வியல், இலக்கியம் என்ற பகுதிகளையும் ஆழ்ந்து வாசித் தேன். விளைவாக இஸ்லாமிய அறிவு ஆழம் பெற்றது. இஸ்லாமியத் தூது பற்றிய ஆழ்ந்த நம்பிக்கையும் வளர்ந் தது. இஸ்லாமிய சட்டம் பற்றிய விரிந்த வாசிப்பிலும் மூழ்கினேன். வணக்க வழிபாடுகளிலிருந்து, குற்றவியல் சட்டங்கள் வரை எல்லாப் பகுதிகளையும் வாசித்தேன். இந்த வாசிப்புகளோடு யூசுப் அல்கர்ளாவி, ஷெய்க் முஹம் மத் அல்-கஸ்ஸாலி என்ற இரு பெரும் சிந்தனையாளர் களின் நூல்களையும் வாசிக்கலானேன். இந்த சிந்தனை யாளர்கள் சட்டமியற்றும் அதிகாரம் என்ற கருத்துக்கு கடும் அழுத்தம் கொடுக்காமையையும் அவதானித்தேன்.

இந்த வித்தியாசத்தால் பழைய வேகம் சற்றுக் குறைந்து ஒரு கவனமும், நிதானமும் வரத் துவங்கியது. ஆழ்ந்து இன்னும் படிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அல்குர் ஆனோடு ஏற்பட்ட உறவால் அதனை ஆழ்ந்து நோக்கத் துவங்கினேன். அல்குர்ஆன் மீது பற்றும், ஆயும் ஆசையும் உருவாக ஸையித் குதுபே முதலாவது காரணம்; அடிப் படைக் காரணம். எனினும் இன்னும் விரிந்தும், ஆழ்ந்தும் வாசிக்க ஆராயத் துவங்கினேன். விளைவாக சட்டமியற் றும் அதிகாரம், அரசு என்பவற்றின் மீது கொடுக்கும் அழுத்தம் சரியானதுதானா என்ற சந்தேகம் எழலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் அல்குர்ஆன் அரசு, ஆட்சியாளர்கள் என்ற கருத்தை அழுத்திச் சொல்லவில்லை, சட்டமியற்றும் அதிகாரம் என்ற கருத்துக்கும் ஏன் ஆழ்ந்த அழுத்தத்தைக் கொடுக்க வில்லை என்ற தடுமாற்றம் ஏற்படத் துவங்கியது.

இந்தச் சிந்தனைக் குழப்பத்தோடு ஒரு சிறுபான்மை நாட்டின் சூழலில் சட்டமியற்றும் அதிகாரம், அரசு என்பவற்றின் மீது அழுத்தம் கொடுப்பது யதார்த்தத்தைப் புரியாத தொரு போராட்டமாக அமைந்துவிடும்; உண்மையான களத்தை விட்டு இல்லாததொரு கற்பனை உலகில் போராடுவதாக அமைந்து விடும் என்ற சிந்தனையும் வலுப் பெறத் துவங்கியது. இலங்கையில் சிறுபான்மைக் களத்தில் அரசியல் போராட்டம், வாக்களித்தல் என்பன என்ன கருத்தைக் கொடுக்க முடியும் என்ற குழப்பமும் ஏற்பட்டது. இந்த நிலையில் இயக்க வாழ்வின் இறுதிகாலப் பிரிவுகளில் வித்தியாசமாக எழுதவும், பேசவும் துவங்கினேன்.

இஸ்லாமிய அறிவுப் பகுதி இரு பிரிவுகளைக் கொண்டது. ஒன்று பாரம்பரிய இஸ்லாமியக் கலைகள். அவற்றில் ஒரு பகுதி அல்குர்ஆன், ஹதீஸ், ஆய்வு முறைமை (உஸூல் பிக்ஹ்) பற்றியதாகும். இவை இஸ்லாம் பற்றிய பொதுத் தோற்றத்தையோ, வாழ்வின் பல்வேறு பகுதிகளைப் பற்றிய கொள்கைகளையோ தர மாட்டாது. அடுத்த பகுதி அல்குர்ஆன், ஹதீஸை நேரடியாகப் படித்தலாகும். பாரம்பரிய ஒழுங்கில் இவற்றைப் படித்தால் இஸ்லாம் பற்றிய ஒரு சிதறிய சிந்தனையையே பெற முடியும். நவீன தப்ஸீர்கள் ஊடாகப்படிக்கும்போது இஸ்லாம் பற்றிய தெளிவுக்கு வர முடியும். எனினும் நவீன சமூகவியல் கலைகளின் பின்னணியில் இஸ்லாம் பற்றிய ஆழ்ந்த புரிதலுக்கு வருதல் அல்குர்ஆனை அத்தியாயங்கள் வாரியாகப் படிப்பதனூடாகச் சாத்தியமில்லை.

இரண்டாவது பகுதி நவீன சமூகவியல் பின்னணியிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்தை ஆய்தலும், இஸ்லாமிய சிந்தனைகளும், கருத்துக்களும், கோட்பாடுகளும் நவீன உலகுக்குப் பொருத்தம் என்பது மாத்திரமல்ல; அந்த இஸ்லாத்திடம் நவீன உலகுக்குக் கொடுக்கவே எவ்வளவோ உள்ளது என்ற பின்னணியிலிருந்து இஸ்லாத்தை ஆய்ந்து முன்வைத்தலு மாகும். இந்த வகையில் வந்த ஆய்வுகள் இஸ்லாத்தைப் பற்றிய ஆழ்ந்தப் புரிதலைத் தருவதோடு, அதன் சமூக வாழ் வைப் பற்றிய தெளிவையும் அளிக்கும்.

இவ்வாறு இஸ்லாத்தை விளங்க முயலும் மாணவன் பல் வேறு சிந்தனைச் சிக்கல்களுக்கு உட்பட்டுத்தான் அதனைப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறே இஸ்லாமிய சிந்தனையில் நிறைய அபாயகரமான இடங்களும் உள்ளன. ஸுன்னாவைப் புரிந்து கொள்ளல், சட்டக் கருத்து வேறு பாடுகளைப் பற்றிய புரிதல், சமூகத்தில் பெண் வகிக்கும் பாத்திரம், அழகியல் கலைகளும், இலக்கியமும், அரசியல் போராட்டம், ஷிர்க், பித்அத், நம்பிக்கைப் பகுதியில் இறைபண்புகள் போன்றவை இதற்குச் சில உதாரணங்கள் மட்டுமே. இப்பகுதிகளில் எல்லாம் நடுநிலை சிந்தனைக்கு வருதல் என்பது மிகவும் சிரமமான காரியம்.

நவீன உலகைப் புரிந்து கொள்ளுதலும், அதன் சவால்களை எதிர்கொள்ளலும் இன்னொரு அதிமுக்கியமான பகுதி. இதைப் புரிந்து கொள்ளாமையால் எவ்வளவு பெரும் தவறு கள் உருவாகி உள்ளன; அது எவ்வளவு பெரிய பாதகங் களைக் களத்திலேயே விளைவித்துள்ளது என்பதை தேசி யக் களத்திலும், இஸ்லாமிய உலகிலும் அவதானிக் கிறோம். சட்டத்திலும், நம்பிக்கைப் பகுதியிலும், சமூக இயக்க போராட்டப் பகுதியிலும் இறுகிய சிந்தனைப் போக்கு எந்த வகையிலும் சாதகமான விளைவுகளைத் தராது என்பதனை நாம் புரிந்து கொள்வது இஸ்லாமிய சிந்தனை நூல்களினுள்ளே செல்லும் போது எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமமானது என்பதனை இஸ்லாமிய சிந்தனைப் பாரம் பரியத்தோடு தொடர்புபடும் யாரும் விளங்கிக் கொள்ள முடியும்.

இறையருளால், அவனது விஷேட உதவியால் இஸ்லாமிய சிந்தனைப் பகுதியில் வெகு தூரம் நீந்திச் சென்றாலும் நடுநிலை சிந்தனைப் போக்கோடு திரும்பி வர என்னால் முடிந்தது. வரும் வழியில் ஆங்காங்கே நான் விட்ட தவறு களுக்காக அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருகிறேன்.

ஆழ்ந்து, முறையாக இஸ்லாமிய சிந்தனையைப் படிப் பதற்கோ, ஆன்மீக ரீதியாக எம்மை வளர்த்து எம் நடத் தையை சீர்படுத்தி, எம்மைப் பக்குவப்படுத்தி பயிற்று விக்கவோ எமக்கு சிறந்த, உயர்ந்த ஆசிரியர்கள் கிடைக்க வில்லை. ஒரே ஒரு தாஸிம் மௌலவி (ரஹ்) மட்டுமே கிடைத்தார். ஆழ்ந்த அறிவும், ஆகர்ஷன சக்தியும் கொண்ட ஆளுமை. அவரின் காலம் நளீமிய்யாவின் பொற்காலம். ஆனால் அவரது காலம் மிகக் குறுகியது. 3 அல்லது 4 வருடங்கள் மட்டுமே. அதிலும் அவரது இறுதிக்காலம் நோயால் துன்புற்ற காலம். விளைவாக சரியாக எதனையும் நிர்வகிக்க முடியாத காலம். அவரது மரணத்தின் பின் வந்த காலம் நளீமிய்யாவில் குழப்பங்களும், தடுமாற்றங்களும் நிறைந்த காலம்.

இது நளீமிய்யாவையோ, அதன் ஆசிரியர்களையோ குறை சொல்வதல்ல. அல்லாஹ் எம் எல்லோரையும் மன்னிக் கட்டும். அப்படியொரு நளீமிய்யாவின் களம் கிடைத் திருக்காவிட்டால் நாம் உருவாகியிருக்க மாட்டோம். எனவே நளீமிய்யாவும் அதன் வாழ்வும் எம்மைப் பொருத்த வரையும் ஒரு பாக்கியமே. எனினும் இஸ்லாமிய அறிவு பெறல் என்பது எமது நாட்டைப் பொறுத்தவரையில் எவ்வளவு சிக்கலானது என்பதைக் காட்டவே இந்த உண்மைகளைச் சொல்ல வேண்டி ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப காலத்திலிருந்து என் சிந்தனைகளால் தாக்கமுற்ற எல்லோருக்குமே இப்போது நான் புதிய சிந்தனைகளை எழுதி வருகிறேன். இவை எனது பழைய கருத்துக்களுக்கு நானே செய்து கொள்ளும் விமர்சனமாக அமைய முடியும். சகோதரர்கள் இவற்றைப் படித்து ஆராயுமாறு, வாதத்திற் குட்படுத்துமாறு வேண்டுகிறேன்.

நான் என்னை ஒரு பெரிய சிந்தனையாளனாகக் காண் பதில்லை. ஓர் எளிய மாணவனாகவே இன்றும் காண் கிறேன். சிந்தனைத் தவறுகள் எப்போதும் பாரதூர மானவை. எனவேதான் பழைய எனது போக்கை மீண்டும் மீள் ஆய்வு செய்து திருப்பி எழுதுகிறேன். அவற்றைப் பார்க்குமாறு உங்களைக் கோருகிறேன்.

நான் ஒருபோதும் இயக்கங்களுக்கு எதிரானவனல்ல. ஆனால் இயக்கப் போக்கை நான் விமர்சிக்கக் கூடாதென தயவுசெய்து எதிர்பார்க்காதீர்கள். முஹாஸபா - சுயவிமர் சனம் இஸ்லாமியப் பாரம்பரியங்களில் ஒன்று. அதன் மூலமே நாம் எம்மை சீர்படுத்திக் கொள்கிறோம்; மீள் ஒழுங்குபடுத்திக் கொள்கிறோம். எனவே என்னை எதிரியா கப் பார்க்காமல் உங்களது சிந்தனையின் உறவினராகப் பாருங்கள்.

அடுத்து இஸ்லாமிய சிந்தனையின் போக்கை, வரலாற்று ஓட்டத்தை இங்கு தருவது நான் இங்கு விளக்க வரும் விட யத்திற்குப் பொருத்தமாக அமையும் எனக் கருதுகிறேன்.

நவீன இஸ்லாமிய சிந்தனைக்கு வரலாற்று ரீதியான வளர்ச்சிக் கட்டங்கள் இருப்பதனை அவதானிக்க முடி கிறது. இஸ்லாமிய விழிப்புணர்வு இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபிலிருந்து ஆரம்பிப்பதாக இந்த வகையில் கொள்ளப்படுகிறது. பின்னர் எழுந்து வளர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய எழுச்சியையும், அதனுடன் வளர்ந்த நவீன இஸ்லாமிய சிந்தனை வளர்ச்சியையும் அவ்வெழுச்சியின் பிரதான நபர்களைப் பொறுத்து கீழ்வருமாறு பிரித்து நோக்கலாம்.

இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் - *1703 - 1791*

இது இஸ்லாமிய உலகில் தோன்றிய முதல் விழிப் புணர்ச்சி. இணைவைத்தல், பித்அத், பாவச்செயல்கள் பெருகி இருந்த, மத்ஹபு வெறி கடுமையாகிப் போயிருந்த காலப்பிரிவு அவரது வரலாற்றுக் கட்டம். இந்த சூழலில் சவூதி அரேபியாவில் நஜ்த் பகுதியில் இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் தோன்றி பிரச்சாரம் செய்தார். ஆரம்பத்தில் பெரு வெற்றி கண்டார். சவூதி அரேபியாவை மேற் சொன்ன தீமைகளிலிருந்து தூய்மைப் படுத்தினார். இப்னு ஸுஊத் என்ற மன்னரோடு உடன்பட்டு சீர்திருத் தங்களை மேற்கொன்டு இஸ்லாமிய அரசொன்றையும் நிறுவினார்.

தூய தௌஹீத், அத்வைதக் கொள்கை போன்ற நெறி தவறிய சூபித்துவம் உருவாக்கிவிட்ட சிந்தனைகளை மறுதலித்தல், பித்அத்களை ஒழித்தல், அல்லாஹ்வை நெருங்க இன்னொருவர் நிலையை நாடும் வஸீலா தேடல் என்ற கருத்தை மறுத்தல், இஜ்திஹாதின் வாயில் திறக்கப் பட வேண்டும் என்ற சிந்தனை என்பவையே இவரது மிகப் பிரதான கருத்துக்களாக அமைந்து காணப்பட்டன. இஸ் லாமிய உலகம் முழுக்க இந்த சிந்தனையால் தாக்கமுற்றது. ஏறத்தாழ இதேகாலப் பிரிவில் முஹம்மத் இப்னு அலி அஸ் ஸனூஸி, ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவி, முஹம்மத் இப்னு அலி ஷௌகானி போன்ற பலர் இஸ்லாமிய உலகு விழிப்புப் பெறப் போராடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அறிஞர்களின் பிரச்சார ஒழுங்குகளுக்கு மத்தியில் சிலவேறுபாடுகள் காணப்பட்டாலும் அவற்றிடையே பொது உடன்பாடுகள் காணப்பட்டன. அந்த வகையில் அவை அனைத்தும் இஸ்லாமியப் புணரமைப்புக்கான போராட்டங்கள் எனக் கூறலாம்.

இரண்டாம் காலக்கட்டம்

ஜமாலுத்தீன் ஆப்கானி	-	1839 - 1896
முஹம்மத் அப்துஹு	-	1849 - 1905
அப்துல் ஹமீத் இப்னு பாதிஸ்	-	1889 - 1940

குறிப்பாக இம்மூவரின் போராட்டத்தையும் இஸ்லாமிய எழுச்சியின் இரண்டாவது அலை எனலாம். இவர்கள் வித்தியாசமான இன்னொரு சூழலின் போது இஸ்லாமிய உலகில் தோன்றினார்கள். மேற்குலகு இஸ்லாமிய உலகின் மீது ஆதிக்கம்செலுத்த முயன்றுகொண்டிருந்த சூழல் ஜமாலுத்தீன் ஆப்கானியின் காலம். அத்தோடு உஸ்மானிய சாம்ராஜ்யம் ஒரு சக்தியாகக் காணப்பட்ட காலப்பிரிவு அது. எனவே முஸ்லிம் சமூகத்தை ஒற்றுமைப்படுத்தி, அவர்களுக்கு மத்தியில் போராட்ட உணர்வைத் தூண்டி வந்திருக்கும் அபாயத்தைத் தடுக்க முயன்றதுவே ஆப்கானியின் பணியாக அமைந்தது.

முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபின் காலப்பிரிவில் அவர் எதிர் கொண்ட பித்அத், மௌட்டீகப் பழக்கவழக்கங்கள், அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்கும் நடத்தைகள், கருத்துக்கள் மட்டுமல்ல; அவற்றோடு சேர்த்து மேற்கு நாகரீக மயப்படுத்தல், கிறிஸ்தவத்தின் ஊடுருவல் என்பன வற்றையும் இந்த அறிஞர்கள் எதிர்கொள்ள வேண்டியா யிற்று. இப்போது பித்அத்களை ஒழிப்பது, இஜ்திஹாதின் வாயிலைத் திறப்பது மட்டுமல்ல பிரச்சினை; முஸ்லிம்கள் தமது அடிப்படை சிந்தனைகள், கருத்துக்களைக் காப்பாற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிக் கொள்வதுவும் ஒரு சவாலாக மாறி இருந்தது.

தொடர்ந்து வந்த முஹம்மத் அப்துஹூவும், அவரது மாணவர் ரஷீத் றிழாவும் சற்று வித்தியாசமான இன்னொரு சூழலை எதிர் கொண்டார்கள். ஆப்கானியின் காலப்பிரிவில் போலன்றி இஸ்லாமிய உலகின் மீது மேற்குலகு படையெடுத்து ஏறத்தாழ தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்திய காலப்பிரிவு இது. எனவே வித்தியாசமாகச் சிந்திக்க வேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டார்கள். இந்த வகையில் முஹம்மத் அப்துஹூ பிரச்சினையை முழுமையாக நோக்கினார். ஆப்கானி சிதறுண்ட முஸ்லிம் சமூகத்தை ஒன்றுதிரட்டி ஒருமுகப்பட்ட போராட்டமொன்றைக் கொண்டு சென்று மேற்குலகிடம் இழந்த பகுதிகளை மீட்டு மீண்டும் முஸ்லிம் சமூகத்தை நிலை நிறுத்தி விடலாம் என்று கருதினார். ஆனால் மேற்கு நாடுகள் இஸ்லாமிய உலகின் பல்வேறு பகுதிகளைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்ததன் பின்னர் இந்த எண்ணம் சாத்தியமில்லை என முஹம்மது அப்துஹூ கண்டார். ஒரு பாரிய சிந்தனைச் சீர்திருத்தம், புணரமைப்பே இதற்கான வழி என அவர் கருதினார். எனவே அப்பகுதியில் முஹம்மது அப்துஹூ போராடினார். மத்ஹபு மயப்பட்ட சிந்தனைப் போக்கு, வழிபிறழ்ந்த தஸவ்வுப், நம்பிக்கைப் பகுதியில் நுழைந்து விட்ட பல்வேறு கோளாறுகள் என்பவற்றுக்கெதிராக அவர் போராடத் துவங்கினார்.

மேற்கத்திய சிந்தனை ஆதிக்கத்திலிருந்து விடுபடலுக்கான சிந்தனைகளையும், கருத்துக்களையும் அத்தோடு அவர் முன்வைத்தார். 1905 இல் முஹம்மது அப்துஹூவின் மரணத்தின் பின்னர் அவரது மாணவர் றஷீத் றிழா ஏறத்தாழ 30 வருட காலம் அதே சிந்தனைப் போக்கில் சென்றார். எனினும் றஷீத் றிழாவின் சொந்த ஆய்வுகளும், கருத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், முடிவுகளும் இதனோடு இணைந்தன. ஏறத்தாழ றஷீத் றிழாவின் இதே காலப்பிரிவில் அல்ஜீரியாவில் அப்துல் ஹமீத் இப்னு பாதீஸ் ஒரு சிந்தனைப் போராட்டத்தைக் கொண்டு சென்றார். அது பல இஸ்லாமிய அறிஞர்களின் கூட்டு இணைப்போடு சென்ற போராட்டமாக அமைந்தது. அல்ஜீரியாவில் சுதந்திர போராட்டம் ஒரு பக்கம் செல்ல, பிரான்ஸிய மொழியும், கலாச்சாரமும் அங்கு வேரூன்றாது பாதுகாப்பதில் இப்னு பாதீஸ் ஆற்றிய பங்கு மகத்தானது.

இஸ்லாமிய சிந்தனையின் இந்த ஓட்டத்தை விளக்க அல்ஜீரியாவின் சிந்தனையாளர் மாலிக் பின் நபியின் கருத்துப் பிரயோகமொன்றைக் கையாள்வோம். காலணித்துவம், காலணித்துவத்திற்கு உட்படும் சமூகநிலை இவை இரண்டுமே இஸ்லாமிய உலகில் காணப்பட்டது. இதில் காலணித்துவத்திற்கு எதிராகப் போராடியமையே ஜமாலுத்தீன் ஆப்கானியின் பணியாயிற்று. அது வெளிச்சக்திகளுடனான போராட்டம். அடுத்து காலனித்துவத்திற்கு உட்படும் சமூக நிலைக்கு எதிராகப் போராடியமையே முஹம்மது அப்துஹு, றஷீத் றிழா, அப்துல் ஹமீத் இப்னு பாதீஸ் போன்றோரின் பணியாயிற்று. இது சமூகத்தின் உள்ளே இருந்த பிழையான சக்திகளோடு போராடுவதாக அமைந்தது.

இதன் அடுத்த கட்ட சிந்தனை ஓட்டமாகவே இமாம் ஹஸனுல் பன்னா வருகிறார். அவரது சிந்தனையின் அடிப்படை அம்சம் இஸ்லாத்தின் முழுமைத் தன்மை என்பதாக அமைந்தது. இஸ்லாம் தனிமனிதன், சமூகம், உலகு அனைத்து நிலைகளுக்குமான வழிகாட்டும் பூரணத்தன்மை கொண்டது; மனிதனின் அனைத்து விவகாரங்களையும் அது ஆள்கிறது. இஸ்லாம் ஒரு தத்துவம், சட்டம், ஒழுக்கம் என்றவாறு ஹஸனுல் பன்னா இஸ்லாத்தை முன்வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அக்காலச் சூழ்நிலையின் வெளிப்பாடாக அமைந்தது. இஸ்லாம் என்பது மனிதனுக்கும், இறைவனுக்குமிடையிலான தொடர்பு. அது சில குறிப்பிட்ட வணக்க வழிபாடுகள் என்ற நிலை சமூகத்தின் பரவலான சிந்தனையாகக் காணப்பட்ட நிலையிலேயே ஹஸனுல் பன்னா இக்கருத்தையும், அதற்கான ஒரு இயக்கத் தொழிற்பாட்டையும் முன்வைக்க வேண்டியதாயிற்று.

இஸ்லாமிய உலகு அந்நியர்களின் ஆதிக்கத்திற்குட்படப் போகும் சூழலில் அந்தக் காலணித்துவத்தோடு போராடும் இஸ்லாமிய சிந்தனையை முன்வைத்தவர் ஆப்கானி. இஸ்லாமிய சட்டம், அல்குர்ஆன் விளக்கவுரை என்பவற்றின் மீள் புணரமைப்பாளர் முஹம்மது அப்துஹு, றஷீத் றிழா. இத்தொடரில் ஹஸனுல் பன்னா இஸ்லாத்தின் சம்பூரணத்தன்மை, அரசியலோடு மார்க்கத்தை இணைத்தல், போராடலுக்கான இயக்கக் கட்டமைப்பு போன்ற சிந்தனைகளை முன்வைத்தவராக அமைகிறார்.

நவீன இஸ்லாமிய சிந்தனை ஓட்டத்தின் இடைநடுவே குறிப்பிட்டதொரு சூழ்நிலையின் விளைவாக மௌலானா அபுல் அஃலா மௌதூதியும், ஷஹீத் சையித் குதுபும் வருகிறார்கள். இவ்விரு பெரும் சிந்தனையாளர்கள் முஸ்லிம் சமூகத்தின் மீது விளைவித்த தாக்கம் மிகப் பாரியதாகும். இன்றுவரையில் அவர்களது தாக்கம் நிலைக்கிறது. அவர்களது சிந்தனையை கீழ்வருமாறு வகுக்கலாம்.

(i). சட்டமியற்றும் அதிகாரம் என்ற கருத்தியலைத் தனியொரு சிந்தனைப் போக்காக உருவாக்கி அதனை மையப்படுத்தி விளக்கியமை.

(ii). குறிப்பாக மேற்கத்திய நாகரிகத்தையும், சிந்தனையையும் தாக்கி விமர்சிக்கும் போக்கை ஆரம்பித்து வைத்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii). இவை இரண்டினதும் விளைவாக மூடுண்ட, உடனிருந்து கருத்துப் பரிமாறல் போக்கை விட்டு விலகி நின்று பேசும் போக்கை தஃவாவின் போக்கில் உருவாக்கி விட்டமை.

ஜாஹிலிய்யத் என்ற சொல்லின் கடும் பிரயோகமும் முஸ்லிம் சமூகத்தையும் ஜாஹிலிய்யத்தில் விழுந்து விட்ட சமூகம் எனக் கண்டமையும் சமூகங்களை விட்டு விலகி நின்று உறவாடும் போக்கை உருவாக்கி விட்டது.

இவ்விரு சிந்தனையாளர்கள் காலப்பிரிவில் இரண்டு உண்மைகளை அவதானிக்க முடிகிறது.

(i). முஸ்லிம் சமூகத்தில் தேசிய அரசுகளின் தோற்றமும், தேசியம் என்ற கருத்தியல் ஆழ்ந்து பேசப்பட்ட மையும், அரபு தேசியவாதம் போன்றவை ஒரு கொள்கை வடிவு பெற்று செல்வாக்குச் செலுத்த முற்பட்டமையும்.

(ii). சர்வதேச ரீதியாக கம்யூனிஸம் செல்வாக்குடன் விளங்கியமையும், முஸ்லிம் சமூகத்தின் புத்தி ஜீவிகளை அது கடுமையாகப் பாதித்தமையும்.

இவ்விரு சிந்தனையாளர்களின் பின்னர் 90 களின் நடுப்பகுதிகளில் ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி, யூசுப் அல்கர்ளாவி, அப்துல் ஹமீத் அபூ சுலைமான், அப்துல் வஹ்ஹாப் மிஸைரி போன்றோர் இன்னொரு அலையாக நவீன இஸ்லாமிய சிந்தனை வரலாற்றில் தோன்றுகின் றார்கள். தொடர்ந்து அமெரிக்காவின் சர்வதேச வர்த்தக நிலைய இரட்டைக் கோபுரத் தகர்ப்பு, தொடர்ந்து பயங் கரவாதத்திற் கெதிரான யுத்தம், அரபுலகப் புரட்சி போன்ற நிகழ்வுகள் இஸ்லாமிய சிந்தனையில் பல்வேறு அதிர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஏற்படுத்தி விட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை. அந்தப் பின்னணியிலேயே ஷெய்க் அஹ்மத் அர்ரைஸூணி, தாரிக் றமழான் போன்ற பல்வேறு சிந்தனையாளர்கள் களத்திற்கு வருகிறார்கள்

இந்தப் பின்னணியில் 2000 இற்குப் பின்னரான இஸ்லாமிய சிந்தனையை ஆராயும் போது கீழ்வரும் அம்சங்களை அடையாளம் காண்கிறோம்:

1) முஸ்லிம் சமூக அறிவுப் பாரம்பரியம் ஆழ்ந்த விமர்சனத்திற்குட் படுத்தப்பட வேண்டும். பாரம்பரிய ஆய்வு முறைமையும் கூட மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

2) மகாஸித் அஷ்-ஷரீஆ - ஷரீஆவின் இலக்குகள் என்ற சட்ட ஆய்வுப் பகுதி தனிக்கலையாகத் தோற்றம் பெற்று வளர்ந்து செல்கின்றமை.

3) ஆட்சியை இலக்காகக் கொண்ட தஃவா முறைமை மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். இஸ்லாமிய ஆட்சி என்ற எண்ணக்கருவே மீளாய்வுக்குட்படுத்தப் பட வேண்டிய அம்சமாகும்.

இவ்வாறு இஸ்லாமிய சிந்தனை என்பது ஜமாலுத்தீன் ஆப்கானி துவக்கம் இன்றுவரை தொடர்ந்தது வளர்ச்சி யைக் கண்டே வந்துள்ளது. அது ஒரு போதும் தேக்கமுற்று நின்றுவிடவில்லை. சிறுபான்மையாக வாழும் நாமும் இந்தச் சிந்தனை ஓட்டத்துடன் வளர்ந்து வர வேண்டும். எங்காவதோரிடத்தில் நின்றுவிடக் கூடாது. இந்தப் பரந்து விரிந்த சிந்தனை எதனையும், யாரையும் கண்மூடிப் பின்பற்றாது எமது நிலம், சூழலுக்குப் பொருத்தமானதை நாம் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது இங்கு நான் மொழிபெயர்த்துள்ளதொரு கட்டு ரையும் இந்தவகை சார்ந்தது. அதன் ஆசிரியர் அஹ்மத் அர்ரைஸூணி, நவீன உலகின் தலைசிறந்த அறிஞர்களில் ஒருவர் மகாஸித் ஷரீஆ என்ற ஷரீஆவின் இலக்குகளும், நோக்குகளும் என்ற கோட்பாட்டில் ஆழ்ந்த புலமை உள்ளவர். அது பற்றிய பல ஆய்வுகளை மேற்கொண்டவர். இருபதிற்கும் மேற்பட்ட மிகச் சிறந்த நூல்களின் ஆசிரியர். இஸ்லாமியப் போராட்ட வாழ்வில் அவரது தாய்நாடான மொரோக்கவில் இயக்க ரீதியாகக் கலந்து கொண்டவர். அதேவேளை எந்தவிதமான வெறியுணர்வுமின்றி இயக்க ஒழுங்கின் சாதக பாதகங்களையும் விளக்கியவர். அல் லாஹ்வின் அருளால் அவரது பல நூல்கள் எனக்குக் கிடைத்தன. இப்போது அவற்றை ஆய்வதில் ஈடுபட்டு வருகிறேன்.

இந்தக் கட்டுரை அல்குர்ஆன் அழுத்தம் கொடுத்தது அரசுக் கன்று. சமூகத்திற்கே ஆகும் என்ற கருத்தியலை ஆழ மாகவும், மிகுந்த ஆதாரபூர்வமாகவும் சொல்கிறது. சிறு பான்மை சமூகத்தைப் பொறுத்த வரையில் அரசு என்பதை மையப்படுத்திய சிந்தனையும், வேலைத்திட்டமும் பொருத்தமற்றது. சமூகத்தை மையப்படுத்திய வேலைத் திட்டமும், சிந்தனையுமே பொருத்தமானது. என்ற சிந் தனையை இங்கிருந்து பெற முடிகிறது.

இவ்வாறு இந்தக் கட்டுரை சிறுபான்மை முஸ்லிம் சமூகத்திற்கான ஒரு கருத்தியலை உருவாக்க முயல்கிறது. தொடர்ந்தும் சிறுபான்மை சமூகத்திற்கான வழிகாட்டலை வழங்கும் வகையிலான ஆய்வுகளை சொந்தமாகவோ, மொழிபெயர்ப்பாகவோ வெளியிட உள்ளோம் இன்ஷா அல்லாஹ்.

உஸ்தாத் ஏம்.ஏ.எம். மன்ஸூர் (நளீமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி மொரோக்கவின் அராஇஷ் பகுதியில் 1953 இல் பிறந்தவர். கஸ்ர் கபீர் நகரத்தில் ஆரம்ப மற்றும் உயர்தரக் கல்வியைப் பெற்ற அவர் ரபாத் நகர் ஐந்தாம் முஹம்மத் பல்கலைக்கழகத்தில் இளமானி, முதுமாணிக் கற்கைகளையும் தனது கலாநிதிக் கற்கையை அதே பல்கலைக்கழகத்தில் உஸூலுல் பிக்ஹு துறையிலும் நிறைவு செய்தார். சட்ட பீடம் மற்றும் கலை பீடத்திலும் தலா ஒரு வருடக் கற்கைகளையும் நிறைவு செய்தார்.

இஸ்லாமிய ஷரீஆவின் உன்னத நோக்கங்கள் (மகாஸித் அஷ்ஷரீஆ) குறித்த ஆய்வுப் பரப்பில் அதிக கவனம் செலுத்தும் கலாநிதி அஹ்மத் ரைஸூனி, இந்தத் துறையில் பல நூற்களையும் ஆய்வுகளையும் எழுதியுள்ளார்.

கற்பித்தல் துறையில் கலாநிதி அஹ்மத் ரைஸூனி அவர்கள் மிகுந்த அனுபவம் கொண்டவர். 1986 ஆம் ஆண்டு முதல் உஸூலுல் பிக்ஹ் மற்றும் மகாஸித் அஷ்ஷரீஆ துறையில் கற்பித்து வருகிறார். மொரோக்கோவின் பல பல்கலைக்கழகங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட முதுமாணி மற்றும் கலாநிதி ஆய்வுகளுக்கான மேற்பார்வையாளராக செயற்பட்டுள்ளார்.

வெளியீடு
தாருல் ஹிக்மா வெளியீட்டகம்
110, கலாவெவ, விஜிதபுர
0772262640, 0714260640

Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ISBN 978-955-54392-5-1
978 9555439251
விலை: 150/-